# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஸு ஆனிமீ உகூ ( 1936 ஜூலாய் 9 ) வியாழக்கிழமை { இலக்கம்—உகூ


—:யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு:—

# கொக்குவில் வள்ளியின் குடும்ப இரகசியம்

## புகையிலை வியாபாரமா? சோர வியாபாரமா?

## வெட்டினது யார் சின்னட்டியனா? வள்ளியா?

நமது நிருபர்

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் சென்ற (6-7-36) திங்கட்கிழமை காலை 11-மணியளவில் நீதியரசர் F. J. சூற்ஸ் (Soertsz) முகதாவில் கொக்குவிலில் வசிக்கும் சின்னட்டியன் பெண் வள்ளி ஓர் கத்தியால் அவ்வூர் வேலன்-ஆறுமுகத்தானை வெட்டிக் கொல்ல எத்தனித்ததாயும் வள்ளியின் புருஷன் காசி—சின்னட்டியன் முதலாவதாக இச் செயலுக்கு உதவிபுரிந்ததாயும், இரண்டாவதாக ஓர் ஆமாரால் அடித்ததாயும் குற்றஞ் சாட்டப் பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி A. H. R வீரசூரியாவும் எதிரி சார்பாக திரு S. D. தம்புவும் ஸ்ரோறரும் வாதித்தனர்.

திரு. V. சபாபதி ஜூரித்தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

காயக்காரனாகிய வேலன் ஆறுமுகத்தான் கூறியதாவது:—

### பங்கு வியாபாரம்

எனக்கு வயசு நாற்பது; நான் கொக்குவிலில் வசிக்கிறேன்; நான் ஒருபயிர்ச் செய்கைக்காரன். எனக்கு இவ்விரு எதிரிகளையுந் தெரியும். இரண்டாம் எதிரி முதலாம் எதிரியின் புருஷன்; இவர்கள் என்னுடைய வீட்டுக்கு முன் வீட்டில் இருக்கிறவர்கள். இரண்டாம் எதிரியும் நானும் பங்காளிகளாகப் புகையிலை வியாபாரஞ் செய்தோம்; தோட்டக் காரரிடம் புகையிலை வாங்கும்போது அவர்களுக்கு அட்வான்ஸ் பணமாக ஓர் சிறுத்தொகை கொடுப்போம் அப் புகையிலையை விற்றபின்தான் மிகுதிப் பணத்தைக் கொடுப்போம்.

சென்ற கார்த்திகை மாதம் 25ம் தேதி பிற்பகல் 7 அல்லது 7½ மணியளவில் நான் எனது வீட்டில் (1) வயித்தி (2) சின்னட்டியன் என்பவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். 2ம் எதிரி என்னை "ஆறுமுகத்தாணண்ணை" என்று கூப்பிட்டு புகையிலைக் கணக்காலுள்ள கொடுக்கல் வாங்கலைப் பற்றிப்பார்க்க வரும்படி கேட்டார். நான் அவனுடைய வீட்டுக்குச் சென்று திண்ணையில் இருந்தேன். இரண்டாம் எதிரி வீட்டு வாசலில் இருந்தான். முதலாம் எதிரி வீட்டுக்குள் இருந்தாள். இரண்டாம் எதிரி இச் சம்பவத்திற்கு 2 கிழமைக்கு முன் புகையிலை விற்ற காசைச் செலவு செய்வோம் என்றும் கடன்காரர்கட்குச் சில நாட்கள் கழித்துக் கொடுக்கலாம் என்றும் சொன்னார். நான் "அதற்குச் சம்மதிக்க மாட்டேன்; கடன் காரருக்குக் காசு கொடுக்கத்தான் வேண்டுமென்று" வற்புறுத்திக் கூறினேன். உருப்பராயில் வசிக்கும் வேலன் என்பவனுக்கு 500 புகையிலைக்கணக்கால் கொடுக்க வேண்டும். கடன் காரர்கட்குக் கட்டாயம் காசு கொடுக்கத்தான்வேண்டுமென்று நான் திருப்பவும் மிகவும் வற்புறுத்திப் பேசினேன். இதற்காக நாங்கள் இருவரும் வாக்குவாதப்பட்டோம். 2-ம் எதிரி ஓர் கத்தியால் வயிற்றில் அடித்தார். நான் கத்தியைப் பிடித்தேன். அவன் எனது தலை மயிரினும் நான் அவனுடைய தலை மயிரினுமாகப் பிடித்தோம்.

### ஆஸ்பத்திரியில் நாலுநாள்

அவன் என்னை அறைக்குள் இழுத்துச் சென்றான். அப்போது முதலாம் எதிரியாகிய பள்ளி ஓர் கத்தியால் எனது முதுகில் வெட்டினாள். இப்படி வெட்டும்போது அவன் பின்னுக்குத்தான் நின்றான். நான் கத்தியைக் கொஞ்சமுங் காணவில்லை. வெட்டு விழுந்ததும் நான் அறைக்குள் விழுந்து விட்டேன். அந்த அறையில் ஓர் படுக்கையிருந்தது. அப் படுக்கைக் கருகில் தான் விழுந்தேன். நான் சத்தம் போட்டேன். ஆஸ்பத்திரியில் 4 நாள் இருந்தேன். நான் கத்தியால் இவர்களில் யாருக்கேனும் அடிக்க எத்தனிக்கவில்லை. கடைசியாகக் கத்தியல் எதிரி கையில் தான் இருந்தது. இவர்கள் இருவரும்என்னை அங்கேதானே உடையார் வரும் வரையிலும் மறித்திருந்தனர்.

குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது:—

உடையார் இச் சம்பவம் நடந்த இடத்திற்கு 8½ மணிக்கு வந்து விட்டார். நான் எனது வாக்குமூலத்தை அவருக்குச் சொன்னேன். நானும் இரண்டாம் எதிரியும் ஒருவர் பக்கத்தில் மற்றவராக இருந்துதான் கணக்குப் பார்த்தோம். நான் கடன்காரருக்கு எப்படியும் காசு கொடுக்கத்தான் வேண்டுமென்று சொன்னபோது தான் இரண்டாம் எதிரி ஓர் கத்தியால் அடித்தார். அவன் எங்கிருந்து கத்தியல் எடுத்தான் என்று எனக்குத் தெரியாது. கத்தியல் அடித்ததும் நாங்கள் ஒருவரை ஒருவர் மயிரைப் பிடித்தோம். எதிரி என்னை அறைக்குள் இழுத்துச் சென்றான். முதுகில் வெட்டு விழுந்ததும் கத்தியில் பிடித்ததைப் பிடியை விட்டேன். நான் உடையாருக்கு என்னை அறைக்குள் இழுத்துச் சென்றார்களென்றப் கத்தியலால் விலாப்புறத்தில் தானடித்தென்றும் சொல்லவில்லை. நான் குடிக்கிறதில்லை.

முன் உருப்பராய் வேலனுக்கு 500 ரூபாதான் கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால் இப்போது 30 ரூபா தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. 2ம் எதிரி கல்வீட்டில் சீவிக்கிறான் நான் ஓர் குடிசையில் சீவிக்கிறேன்.

நான் புகையிலை வியாபாரத்தில் கூட்டுவியாபாரம் செய்ததுபோல் அவ்வீட்டிலுள்ள மற்றவர்களுடனும்கூட்டுவியாபாரம்செய்ய எண்ணவில்லை. எதிரியிடம் மாடுகள் இல்லை. எனக்கு வெட்டு விழுந்ததும் நான் சத்தம் போட்டேன். 1ம் எதிரி மார்பில் நகங்களால் கிறண்டின அடையாளங்கள் இருந்ததைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது என்னுடைய மனைவியிடம் அவளையும் பிள்ளைகளையும் சாப்பிட்டுப் படுத்துக்கொள்ளும்படியும் என்னைக் காத்திருக்க வேண்டமென்றும் சொல்லவில்லை.

### வள்ளியின் சாட்சியம்

இதன்பிற்பாடு வயித்தி சின்னப்பொடியன், உடையார் முதலியவர்கள் சாட்சியம் கூறியபின் 1ம் எதிரியாகிய வள்ளி சாட்சியம் கூறியதாவது:-

நான் எனது வீட்டு அறையில் நித்திரையாய் இருந்தபோது ஆறுமுகத்தான் வந்து என்னைத் தொந்தரவு செய்தான்.

நான் ஓர் கத்தியால் வெட்டினேன். ஆனால் வெட்டு எங்கே விழுந்ததென்று எனக்குத் தெரியாது. நானே உடையாரிடம் கத்தியைக் கொடுத்தேன்.

நான் எதிரியினுடைய இம்சையைப் பொறுக்கமுடியாமல்தான் கத்தியால் வெட்டினேன். நாங்கள் படுக்கைக்குப் போகுமுன் சாப்பாடு முடித்துக்கொண்டோம். எதிரி அந்நேரம் குடித்திருந்தான். நானும் இரண்டாம் எதிரியும் இழுபறிப்படும்போது தான் எனது புருஷன் வந்தான். அவன் எதிரிக்குக் கத்தியலால் அடிக்கவில்லை. எங்கள் வீட்டில் ஆமார் இல்லை. எங்களுடைய சமையலறை ஓர்கொட்டில்.

தொடர்ச்சி 2ம் பக்கம்.

திருச்சத்தி முற்றம்—திருவிருத்தம்.

நில்லாத் நீர்சடை நிலையாக் கருதியிந் நீணிலத்தோன்
றல்லாக் குழிவீழ்ந் தயர்வுறு வேனைவந் தாண்டுகொண்டாய்
வில்லேர் புருவத் துமையாள் கணவா! விடிற்கெடுவேன்
செல்வா! திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

# பண்டைக்கால இலங்கை வாசிகள்

## இலங்கையும் இந்தியாவும் இணைக்கப்பெற்றிருந்தகாலை இங்குவாழ்ந்த ஜாதியார்

## இயக்கர் அரக்கர் வரலாறு; பறக்கும் பல்லிகள், ராஜநாகம், பல்வன கமீன்கள்

சென்ற ஜூன் மீ 27ந் திகதி கொழும்பு மியூஸியம் மண்டபத்தில் தேசாதிபதி அவர்களின் தலைமையில் நடந்த ஐந்தக்களாராய்ச்சி உதவியதிகாரியான திரு ஈ பி. டெரனியகல நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

வெகுகாலத்திற்கு முன்பு இலங்கை, மலையாளக் கடற்கரையுடன் சேர்ந்திருந்ததென்றும் பின்பு கடலால் பிரிக்கப்பட்டதென்றும் ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது. லட்சக்கணக்கான வருஷங்களுக்கு முன் தென்னாபிரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவரை ஒரே பூப்பிரதேசமாக இருந்ததென்றும் இந்திய இலங்கை யாவும் இந்தப் பெரிய கண்டத்தில் அடங்கியிருந்தன வென்றம் பூகோள தத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனால் இலங்கையில் புராதன ஜீவராசிகளைப்பற்றியும் தாவர வர்க்கத்தைப் பற்றியும் விஞ்ஞான பண்டிதர்கள் பிரத்தியேக ஆராய்ச்சிகள் செய்வதில்லை.

சென்ற சில வருஷங்களில் பல புதிய புராதனச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பூமியில் எத்தனையோ ஜீவராசிகள் தோன்றி மறைந்திருக்கின்றன சில புராதனப் பிராணிகள் சென்ற லட்சக்கணக்கான வருஷங்களில் பல்வேறு உருவ மாறுபாடுகளை யடைந்து தற்காலத்தில் காணப்படும் பிராணிகளாகப் பரிணமித்திருக்கின்றன வென்று பரிணாம வாதிகள் கூறுகின்றனர். இவ்விதமான ஆராய்ச்சிகளுக்கு முக்கியமான சாதனமாயிருப்பது பூமியின்கீழ்க் கண்டெடுக்கப்படும் ஜீவராசிகளின் எலும்புக் கூடுகளும் மற்றச் சின்னங்களுமேயாகும்; இந்தச் சின்னங்களிலிருந்து அந்த ஜீவராசிகள் பூமியில்சஞ்சரித்து வந்த காலம் மதிப்பிடப்படுகிறது. சென்ற வருஷம் வரை இலங்கையின் ஜீவராசிகளைப்பற்றி ஆந்த் தொடர்புகள் அனுமான பூர்வமாகவே இருந்தன. சென்ற வருஷத்தில் கிடைத்த சில சின்னங்களை மற்ற நாடுகளிற் கண்டெடுக்கப்பட்டிருக்கும் புராதனச் சின்னங்களோடு ஒப்பிடுவதன் மூலம் இலங்கைக்கும் மற்ற நாடுகளுக்கும் ஆதிகாலத்தில் இருந்த பரஸ்பர சம்பந்தத்தைப்பற்றித் திட்டமாக ஆராய்ச்சி செய்வது சாத்தியமாகிறது.

முன் காலத்தில் இலங்கையில் நீர்யானை என்ற மிருகம் இருந்ததாகத் தெரிகிறது. வெகுகாலத்திற்கு முன் இலங்கையில் வசித்த யானைகள் மத்தகத்தில் உறுதியான எலும்புபோன்ற புடைப்புடன் இருந்ததாகக் கூறப்படுகிறது. இதே போன்ற பிராணிகள் ஆபிரிக்காவிலும் மத்தியதரைக்கடல் தீவுகளிலும் சஞ்சரித்து வந்ததென்றும் அங்கிருந்தே இந்தியா இலங்கை முதலிய கீழ் நாடுகளுக்கும் வந்திருக்கவேண்டுமென்றும் யூகிக்கப்படுகிறது.

### அரக்கரும் இயக்கரும்

வெகு சமீபகாலத்தில்தான் இலங்கையில் மனிதவர்க்கம் குடியேறியதாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் சமீபகாலத்தில் வெளியான சில உண்மைகளிலிருந்து மனிதனுடைய மூதாதையான குரங்கு மனிதன் இலங்கையிலும் வசித்திருக்கக் கூடுமென்று சொல்ள இடமிருக்கிறது. மனிதன் தனது ஆயுதங்களையும் மற்றும் தேவையான பொருள்களையும் கற்களினால் செய்து வாழ்ந்த காலத்திலும் இலங்கையில் மனிதர் குடியேறியிருந்தார்களென்று அவர்களால் உபயோகிக்கப்பட்ட பொருள்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டதிலிருந்து தெரிய வருகிறது. இதற்குப்பின் பல மனிதஜாதிகள் அடுத்தடுத்து இலங்கையில் வந்து குடியேறியிருக்கிறார்கள். இலங்கையில் நாமாமிச பட்சணிகளான ராட்சஸர்களும் இயக்கர்களும் வசித்து வந்ததாக ஆதி காலத்துச் சேர புராணக் கதைகள் கூறுகின்றன. இவர்களுக்குப் பின் வந்து குடியேறியவர்கள் நாகர்கள். இவர்கள் உலோகங்களால்செய்யப்பட்ட ஆயுதங்களை உபயோகித்தனர். காட்டுப் பிரதேசங்களிலிருந்து வாழ்ந்தனர். இயக்கர்கள் என்ற சாதியார்களே தற்சமயமுள்ள வேடர்கள். வேடர்களுடைய கர்ண பரம்பரை வரலாறுகளிலிருந்து அவர்களுடைய மூதாதையர் கல்லினுற் செய்த ஆயுதங்களை உபயோகித்தார்களென்றும் அவைகள் பண்டமாற்று முறை மூலம் கிடைத்தனவென்றும் தெரிகிறது.

### குள்ள ஜாதியார்

வேடர்களுடைய கர்ண பரம்பரைக் கதைகளிலிருந்து மற்றொரு ஜாதி மனிதர்கள் வெகு காலத்திற்கு முன் இலங்கையில் இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் மிகக் குள்ளமாகவும் உடல் முழுவதும் அடர்த்தியான உரோமமுள்ளவர்களாகவும் இருந்தார்களாம். இவர்கள் பேசுவது பறவைகள் ஒலிப்பதைப் போலிருக்குமாம். இந்தக் குள்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## மடுக்ஷேத்திரத்தில் களவு

### திருடிய நகைகளை அணிந்திருந்த பெண்

மடுத்திருநாட்களில் மடுவுக்கு யாத்திரை செய்த மிஸிஸ் பிலிப்பா எல். இராமநாதன் என்னும் ஸ்திரி மடுவுக்கு அருகாமையில் ஸ்நாகம் செய்யும்போது தனது நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு ஸ்நாகம் செய்ததாகவும், ஸ்நாகம் முடிந்ததும் நகைகள் வைத்த இடத்தைப் பார்த்தபோது அவை காணப்படவில்லை யெனவும் பொலிசருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. இப்பெண் கொழும்பு வாசியாவள். பொலிசார், திருடரைத்தேடி விசாரணைசெய்தபோது மடுரேட்டால் ஓர் குறத்தியும் வேறு இருவரும் வரக்கண்டனர். இக் குறத்தி திருடப்பெற்ற நகைகளை யெல்லாம் அணிந்திருந்தாள். பொலிசார் இவளையும் மற்றஇருவரையும் கைது செய்தனர்.

---

## கொக்குவில் வள்ளியின் குடும்ப இரகசியம்

1ம் பக்கத் தொடர்ச்சி

ஆனபடியால்தான் கத்தி முதலிய வீட்டுத் தட்டுமுட்டுச் சாமான்களைப் படுக்கையறையில் இராக்காலங்களில் கொண்டுபோய்வைக்கிறதுண்டு. எதிரி என்னிடம் இதற்கு முன்னும் பல முறைகளில் என்னுடன் சேட்டைக் கதைகள் பேசியிருக்கிறான்.

குறுக்கு விசாரணையின் போது கூறியதாவது:-

எங்களுக்கும் எதிரிக்குமிடையே ஒரு பொதுக்கிணறு உண்டு. எதிரி கிணற்றடிக்கு வரும் வேளைகளிலெல்லாம் என்னுடன் சேட்டை செய்கிறது வழக்கம். நான் இவற்றை எனது புருஷனுக்குச் சொல்லுகிறதில்லை. இச்சம்பவத்துக்கு நாலு அல்லது மூன்று மாதங்களுக்கு முன்தான் இப்புகையிலைக் கூட்டு வியாபாரம் தொடங்கியது. நான் இப்படியான கெட்டகுண முள்ளவனுடன் கூட்டுவியாபாரம் செய்ய வேண்டாமென்று எனது புருஷனுக்குச் சொல்லவில்லை. எதிரி செய்யும் கெட்ட செய்கைகளை எல்லாம் புருஷனிடம் சொன்னால் இருவரும் சண்டை பிடிப்பார்களென நினைத்தே சொல்லாமல் விட்டேன்.

எதிரி புகையிலைக் கணக்குகளைப் பற்றிப் பேச அவ்விடம் வரவில்லை இச் சம்பவதற்கு 4 மணித்தியாலத்திற்கு முன் எதிரி எங்கள் வீட்டுக்கு வந்து எனது புருஷன் எங்கே என்று என்னிடம் விசாரித்துச் சென்றான். எதிரி என்னைச் சந்திக்கும் காலங்களிலெல்லாம் என்னைத் தன்னுடன் சிநேகமாய் இருக்கும்படி கேட்பான் இதற்கு நான் மறுத்தால் அவன் என்னைத் தூக்கிச் செல்வதாயும் கூறியிருக்கிறான். ஆனால் எதிரி முதன்முதல் இந்த முறைதான் நான் படுத்திருந்த அறையுள் வந்து என்னைத் தொந்தரவு செய்தான். நான் படுத்திருந்த போது அறையில் வெளிச்சம் இருந்திருக்கவில்லை. அந்த அறைக்கு இரண்டு யன்னல்களுண்டு. அவன் எனது மார்பில் தடவி அவையாளை கசித்தான் நான் கோப பொறுக்க முடியாமல் சத்தமிட்டேன். அவன் எனது வாயைக் கையால் மூடினான் அப்போதுதான் நான் எழுந்து இருந்தேன். இருந்ததும் எனது பக்கத்தில் இருந்த கத்தியை எடுத்து எதிரிக்கு வெட்டினேன். நான் விழித்த யார் என வினவியபோது எதிரி நான்தான் என்று மறுமொழி சொன்னான். அப்பொழுதுதான அவனுடைய சத்தத்திலிருந்து எதிரியை மட்டிட்டேன் எதிரி என்னைத் தன் எண்ணத்துக்கு இணங்க வேண்டும். இல்லையேல் கொலை செய்வதாகக் கூறினான்.

காயக்காரனும் அவனுடைய சாட்சிகளும் கூறியவற்றில் முரண் காணப் பட்டமையாலும் கண்கண்ட சாட்சிகள் இல்லாமையாலும் ஜூரிகள் ஒருமித்து எதிரிகள் குற்றவாளிகளல்லவெனக் கூறி எதிரிகளை விடுதலை செய்தனர்.

---

## பண்டைக்கால இலங்கை வாசிகள்

1ம் பக்கத் தொடர்ச்சி

ஜாதியினர் ஆசியாக் கண்டத்தின் பல நாடுகளிலும் இருந்ததாகக் கருதப்படுகிறது. இதிலிருந்து மிகப் புராதனமான மனிதன் இலங்கையிலும் வாழ்ந்து வந்ததாக எண்ண இடமிருக்கிறது.

### பறக்கும் பல்லிகள்

பறக்கும் பல்லிகளில் 22 வகை மலேயா நாடுகளில் மட்டும் காணப்படுகிறது. தென்னிந்தியாவில் மட்டும் ஓர்வகைப் பறக்கும் பல்லி காணப்படுகிறது. இந்தப் பிராணி இலங்கையிலும் இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் காணப்படுகிறதில்லை. ஆதிகாலத்தில் இலங்கை இந்தியாவுடன் சேர்ந்திருந்து இவைகளுக்கும் மலேயா நாடுகளுக்கும் பூமித்தொடர்பு இருந்தபொழுது இந்தப் பறக்கும் பல்லி மலேயா நாட்டிலிருந்து லங்கை வழியாகத் தென்னிந்தியாவில் புகுந்திருக்கலாம். ஆனால் இப்பிராணி இலங்கையில் காணப்படவில்லை. ஒருவேளை இலங்கை இந்தியாவை விட்டுப் பிரிந்த பின்னர் இது இலங்கையிலிருந்து ஒழிந்து மறைந்து போயிருக்கலாம் அல்லது இலங்கை இந்தியாவைவிட்டுப் பிரிந்த பின்னரும் இந்தியாவுக்கும் மலேயாவுக்கும் பூமித்தொடர்பு இருந்ததென்றும் கருதக்கூடும்.

### ராஜ நாகம்

மேலே கூறப்பட்ட இரண்டாவது கட்சிக்கு ஆதாரமாக மற்றொரு அத்தாட்சியும் இருக்கிறது. தென்னிந்தியாவில் ராஜ நாகம் அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வகைப் பாம்பு கீழ்நாடுகளில் பிலிப்பைன் தீவு வரை காணப்படினும் இலங்கையில் காணப்படவில்லை. ஆனால் சாதாரண நாகம் இலங்கையிலும் மற்றநாடுகளிலும் காணப்படுகிறது. ஆபிரிக்காக்கண்டம்தான் நாகப்பாம்புகளுக்கு ஜனன பூமியென்று கருதப்படுகிறது. வெகு காலத்திற்கு முன்பு பூமித் தொடர்பு இருந்த பொழுது கருநாகம் ஆபிரிக்காவிலிருந்து கீழ்நோக்கி இலங்கை இந்தியா மலேயா பிலிப்பைன் யாவற்றிலும் வியாபித்திருக்கலாம். ஆனால் ராஜ நாகம் பிற்காலத்திய பிராணி யென்றும் கீழ்த்திசைத் தீவுகளிலிருந்து மேற்கு நோக்கிப் பரவியிருக்க வேண்டுமென்றும் அந்தசமயத்தில் இலங்கை இந்தியாவிலிருந்து பிரிந்துவிட்டதால் இது இலங்கையில் காணப்படவில்லை யென்றும் யூகிக்கவேண்டியதாகிறது.

### மீன் இனங்கள்

ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து பிரிந்த பின்னரும் இலங்கை மலேயா நாடுகளுடன் தொடர்புகொண்டிருந்த தென்பதற்குப் பல அத்தாட்சிகள் காணப்படுகின்றன. இலங்கைக்குக் கிழக்கே உள்ள சிறு தீவுகளில் நல்ல ஜலத்தில் வசிக்கக்கூடிய மீன்கள் காணப்படுகின்றன. இதிலிருந்து ஒரு காலத்தில் இலங்கைக்கும் இத்தீவுகளுக்கும் நல்ல ஜலசம்பந்தம் இருந்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. வங்காள விரிகுடா சிறிது சிறிதாக ஜலப்பிரதேசமாக மாறி காளகடலில் தற்சமயமுள்ள நிலைமைக்கு வந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. பழைய பூப் பிரதேசத்திலிருந்து உயர்ந்த மலைச் சிகரங்களே தற்சமயம் வங்காள விரிகுடாவில் உள்ள பல தீவுகளாக மாறியிருக்கவேண்டும்.

---

பாலர் பகுதி

# பாலர் பரிசுக்கட்டுரை



அருமை மருமக்காள்!

இம்முறை இடமின்மையால் புதிதாக ஒன்றும் எழுதப்படவில்லை. பரிசு பெற விரும்பும் மருகர் மருகியர் சென்ற வியாழக்கிழமை யான் குறிப்பிட்டவாறு "எதிர்காலத்தில் நான் எதுவாக இருக்க விரும்புகின்றேன்" என்னும் விஷயமாக ஒவ்வொரு கட்டுரை எழுதியனுப்புவார்களாக முதலாவது கட்டுரையாகத் தெரிந்தெடுக்கப்படும் கட்டுரை அதை எழுதிய மருகரது பெயரோடு இந்துசாதனத்தில் வெளியிடப்படும். எழுதிய மருகருக்குப் பரிசும் அளிக்கப்படும்; பல மருகர் தமக்கு இன்னும் காலம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டமையால், வருந் திங்கட்கிழமை வரை அக்கட்டுரை அனுப்பப் படலாம் என்ற ஏற்பாட்டைச் செய்திருக்கின்றேன். இனிப் பார்ப்போம் உங்கள் கெட்டித்தனத்தை. பரிசு பெறுவது யார் பார்ப்போம். வருகிற திங்கட்கிழமைக்கிடையில் கட்டுரைகள் இங்கு வந்து சேருதல் வேண்டும்.

இங்ஙனம்
உங்கள் அன்பான
சுப்புமாமா

## கடிதங்களுக்கு விடை

மருகர் தி. சிதம்பரநாதனுக்கு வட்டுக்கோட்டை

அன்புள்ள மருக!

உமது கடிதம் கிடைக்கப்பெறறேன். ஆனால், நீர் அதில் குறிப்பிட்டவாறு அதற்குமுன்னர் நீர் எழுதிய கடிதம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆதலால் நீர் என்னை எழுதுமாறு கேட்கும் விஷயம் எது என்றும் எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து அதனைத் தெரிவிப்பீராக.

இங்ஙனம்
உமது சுப்புமாமா

---

## கலியாணக் குழப்பத்தால் கத்திக் குத்து

### எதிரிக்கு மரணதண்டனை

சென்ற செப்டம்பர் மாதம் 2-ந் தேதி சங்ககாமம் கிராமத்தில் 18 வயதுள்ள பொடிநோனா வென்ற யுவதி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டது சம்பந்தமாக அலிஸ் அப்புஹாமி என்ற ஆர். ஏ. எட்வின் என்ற ஒரு வாலிபன் மீது தொடரப்பட்ட ஒரு ருசிகரமான வழக்குச் சென்ற வெள்ளிக்கிழமை அசைஸ் கோட்டில் நீதிபதி திரு சூட்ஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவடைந்தது.

எதிரி தரப்பில் கூறப்பட்ட விபரங்கள் வருமாறு:- பொடிநோனா என்ற பிரஸ்தாப யுவதிக்கும் எதிரிக்கும் விவாகம் நடத்துவதற்கு நிச்சய தாம்பூலம் செய்யப்பட்டது. அப்பொழுது அந்தப் பெண்ணுக்கு ஒரு கழுத்துச் சங்கிலி சந்தோஷமாக மாப்பிள்ளை வீட்டாரால் கொடுக்கப்பட்டது. எதிரி அந்த கிராமத்தை விட்டுப் போன சிறிது நேரத்திற்குப் பின் பெண் வீட்டார் மேற்படி கழுத்துச் சங்கிலியை எதிரியின் சகோதரனிடம் திருப்பிக் கொடுத்துக் கல்யாண ஒப்பந்தத்தையும் நிராகரித்துவிட்டனர்.

பின்னர் எதிரி அந்தக் கிராமத்திற்குத் திரும்பிச் சென்று வீட்டிற்குள் நுழைந்து அவளை 14 இடங்களில் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிக்கொண்டானும். எதிரி வீட்டை விட்டு வெளியில் ஓடும்பொழுது இரு பெண்கள் பார்த்தார்களாம் எதிரி மூன்று மாதங்களுக்குப் பின் பண்டாரவளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டான்

ஜூரிகள் எதிரியைக் குற்றவாளியென ஏகோபித்துக் கூறிய தற்கிணங்க நீதிபதி எதிரிக்கு மரணதண்டனை விதித்துத் தண்டனையை நிறைவேற்ற ஆகஸ்டுமாதம் 7-ந் தேதியைக் குறிப்பிட்டார்.

---

## ஜவஹர் பிரயாணம்

பம்பாய் ஜூலை 3

இன்றிரவு பண்டித ஜவஹர்லால் நேரு அலஹாபாதத்திற்குப் பிரயாணமானார். ஸ்ரீஜத் கே. எப். நரிமன் உள்பட பம்பாய் மாகாணக் காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் அவரை ரயில்வே ஸ்டேஷனில் வழியனுப்பினர்.

பண்டித நேருவுக்குத் தொண்டையில் ஏதோ சுகக்குறைவிருக்கிறது. அதனால் ஒருவாரத்திற்கு பூரண ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகிறார்.

காராச்சியில் ஜூலை 11-ந் தேதி கூடுவதாயிருக்கும் சுதேச சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டிற்கு அவர் போவதாகவிருந்தது தான் வாமுடியாது என்றும் கட்டாயம் வரவேண்டுமானால கூட்டத்தை ஒத்திப்போடும்படியும் பண்டித நேரு அந்த மகாநாடுக் காரியதரிசிகளுக்கு எழுதியிருக்கிறார். அநேகமாய் அந்த மகாநாடு ஜூலை 18ந் தேதிக்கு ஒத்திப்போடப்படலாம்.

---

## மூன்று சோனகர்கள் நீரில் மூழ்கினர்

சேர்வில ஜூலை 2

அனுத்கமத்தைச் சேர்ந்த மூன்று சோனகர்கள் முறையே 20, 20, 18 வயதுள்ளவர்கள் நேற்றிரவு டெக்கோட்டை நதியைப் படகில் கடந்து செல்லுகையில் படகு கவிழ்ந்து அவர்கள் மூழ்கி மாண்டனர். தூரவிருந்து ஒன்றக்கு அவர்கள் போய்க் கொண்டிருந்தார்களாம். சவங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

---

## மன்னர் மகுடாபிஷேகம்

### ஏற்பாடுகள் செய்வதற்கு நிர்வாக சபை

லண்டன் ஜூலை 3—

அடுத்தவருடம் நடக்கும் மகுடாபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்வதற்காக பகிங்ஹாம் அரண்மனையில் பிரிவிக்கவுன்ஸில் கூடியது. அது வகைக்கு 42 பிரபலஸ்தர்கள் கொண்ட ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக யார்க் கோமகன் நியமிக்கப்பட்டார் மெம்பர்களாக காண்டர்பரியார்க் ஆர்ச்பிஷப்புக்களும், பிரதம மந்திரி, பிரபுக்களின் பிரதிநிதிகள் மந்திரிசபையில் முக்கியஸ்தர்கள் மூன்று அரசியல் கட்சிகளின் முக்கிய அங்கத்தினர்கள் முதலியோர்களும் நியமிக்கப்பட்டனர். இந்தக் கமிட்டி பிரிட்டன் சம்பந்தப்பட்ட மட்டிலும் மகுடாபிஷேக விஷயமிக்க கவனிக்கும். டொமினியன்கள் கலந்து கொள்ளும் விஷயம் பொதுவான நடவடிக்கைகளும் இன்னும் டொமினியன் அரசாங்கங்களுடன் யோசிக்கப்பட்டு வருகின்றன.

---

## திருக்கோயில்களில் விபூதி வழங்குதல்

எந்தக் கருமங்களைச் செய்யத் தொடங்கும்போதும் முதன் முதல் விபூதியை அணிந்துகொண்டே கருமங்களைச் செய்கின்றார்கள். இவ்விஷயத்தையறியாது சில திருக்கோயில்களிலே பூசை முடிந்தவுடன் முதன்முதல் தீர்த்தங்கொடுத்தே பின்பே விபூதிகொடுக்கவேண்டுமெனப் பேசுகின்றார்கள். இதற்குப் பிரமாணம் யாதோ? வண்ணைச் சிவன்கோயில் நல்லைக் கந்தசாமிகோயில் சிதம்பரம் முதலிய தலங்களிலும் முதன் முதல் என்னகொடுக்கின்றார்களென்பதை அவர்கள் அறியவில்லைப்போலும். ஸ்ரீகச்சியப்பசிவாசாரிய சுவாமிதானும் "அணிந்துட் கொண்டார்" என்றார். சைவாசிரியராயிருந்தும் வழக்கத்தைவிடுத்துக் குதர்க்கம் பேசுவது தகாதென்பதே நம் உட்கிடை.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை:

---


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் தினம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஈலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலிபிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் திரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சுகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம், சிங்கப்பூர்பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சைவான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ற,
மட்டக்களப்பு.


Y46 1-1-36 to 31-12-36)

# சர்வதேச சங்கத்தில் அபிஸீனியப் பிரச்னை

## நப்பி மோசம்போன அபிஸீனியர்

## நிறைவேறிய தீர்மானங்கள்

ஜெனிவா, ஜூலை 4.

அபிஸீனிய விஷயத்தை முடிவுசெய்யும் விஷயமாய்த் தயாரிக்கப்பட்ட தீர்மானங்கள் சங்கக் கூட்டத்தில் இன்றிரவு நிறைவேறின. 44 தேசங்கள் அதற்குச் சாதகமாக வாக்களித்தன. அபிஸீனியா விரோதமாக வாக்களித்தது. தென் ஆபிரிக்கா, பனமா, வெனிஸ்உலா, சிலி முதலிய தேசங்கள் வாக்களிக்க மறுத்தன.

அபிஸீனியாவின் தீர்மானங்களை முதலில் வாக்குக் கொடுத்த பின்தான் சங்கத் தீர்மானங்களை வாக்களிக்க விடவேண்டுமென்று அபிஸீனியா ஆட்சேபித்தது. ஆனால் கூட்டத்தில அந்த ஆட்சேபணையை நிராகரித்துப் பொதுத்தீர்மானம் நிறைவேறியபின் அபிஸீனியா கொண்டுவந்த தீர்மானங்கள் கவனிக்கப்பட்டன. அபிஸீனியாவை இத்தாலி பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டதை ஒப்புக்கொள்ளக்கூடாது என்ற தீர்மானம் பொதுத் தீர்மானம் நிறைவேறியதால் அவசியமில்லை என்று நிராகரிக்கப்பட்டது. இரண்டாவது, கடன் கோரிய தீர்மானத்திற்கு 23 தேசங்கள் பாதகமாக வாக்களித்தன. 25 தேசங்கள் வாக்களிக்க மறுத்தன. அதனால் தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

ராக்பி 4—

இன்று காலை சிறிது நேரம் கூடியபின் சங்கக் கூட்டம் மாலையில் கூடுவதாக ஒத்திவைக்கப்பட்டது. சில தேசங்களின் பிரதிநிதிகள் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் விஷயமாய் தங்களுடைய அரசாங்கங்களைக் கலக்க வேண்டுமென்று கோரினர்.

கூட்டத் தீர்மானம இரண்டுபக்கமிருக்கிறது. பத்திரிகைச் செய்திகளின்படி அதில சொல்லியிருப்பதாவது:

சர்வதேச சங்கத்தின் அதிகாரத்தை அதிகப்படுத்த விரும்புவதாகவும் சங்க அங்கத்தவர்களுக்கு சங்கம் அளிக்கும் பாதுகாப்பை உறுதியாகவும் பலமாகவும் செய்ய வேண்டியது அவசியமாயிருப்பதாகத் தெரிவதாகவும் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அரசாங்கங்கள் ஸெப்டம்பர் முதல் தேதிக்குள் சங்கத்தின் ஷரத்துக்களைச் சரியானபடி நடத்த எவ்வித மாறுதல் செய்யவேண்டுமென்று அறிவிக்கும்படி இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது. அப்படிக்கிடைக்கும் பதில்களைச் சரிபார்த்து தராவாரியாகப் பிரித்து அடுத்த கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும்படி சங்கப் பிரதம காரியதரிசியை இந்தக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

### இத்தாலி அபிஸீனியத் தகராறு

இத்தாலி அபிஸீனியத் தகராறினால் ஏற்பட்ட நிலைமைபற்றி கிடைத்திருக்கும் கடிதங்களையும் சொல்லப்பட்ட விபரங்களையும் கூட்டம் கவனித்தது. இதுவரை இவ் விஷயமாய் அறிவிக்கப்பட்டவைகளையும் செய்யப்பட்ட தீர்மானங்களையும் ஞாபகப் படுத்திக் கொள்கிறது. அவற்றின்மேல் சங்கக் கூட்டம் 16வது ஷரத்துப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையெல்லாம் நிறுத்திவிடும்படி கூட்டுக்கமிட்டிக்கு அறிவிப்பதாக முடிவுசெய்கிறது.

கூட்டம் செப்டெம்பர் 7ந் தேதி கூடுவதற்குப் பதில் 28-ந் தேதி கூடவேண்டுமென்று கூட்டத்தின் பொதுக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

### தீர்மானத்தின் முகவுரை

ஜெனிவா 4—

கூட்டம்பியூரோ, கஷ்டங்களையெல்லாம் சமாளித்துப் பொதுப்படையாக ஓர் தீர்மானத்தைத் தயாரித்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் முகவுரையில் சங்க ஷரத்துக்களின்படி பூரண நடவடிக்கை எடுக்க முடியாமல்போன காரணங்களைச் சொல்லி ஷரத்துக்களின் கொள்கைகளைத் திரும்பவும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. 1932-ம் ஆண்டு ஆகஸ்டு 3-ந் தேதி தென் அமெரிக்க நாடுகள் அனுப்பிய அறிக்கையும் மற்ற ராஜாங்க அறிக்கைகளும் முகவுரையில் குறிப்பிடப்படுகின்றன.

தீர்மானத்தின் முதல் பகுதியில் சங்க சீர்திருத்தம்பற்றியும் இரண்டாம் பகுதியில் நிர்ப்பந்தங்களை எடுத்துவிடுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்தாலியின் பலாத்காரநடவடிக்கையினால் அபிசீனியாவில் எடுத்துக்கொண்ட பிரதேசத்தை இத்தாலியைச் சேர்ந்ததாக ஒப்புக்கொள்ளக்கூடாது என்று அபிசீனியச் சக்கரவர்த்தி கேட்டார். அது விஷயம் பொதுவான தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாக பியூரோ சொல்கிறது. நீகஸ் கடன் கேட்டதற்குக் கொடுக்க முடியாது என்று சொல்லப்படுகிறது.

### சிறிய தேசங்களின் உறுதி

அபிசீனியாவை இத்தாலி சேர்த்துக்கொண்டதைச் சங்கம் ஒப்புக்கொள்ளவில்லை யென்று தீர்மானத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லவேண்டுமென்று சிறிய தேசங்கள் கேட்கின்றன. பெரிய தேசங்கள் பொதுவாகக் குறிப்பிட்டால் போதும என்று சொல்கின்றன. ஆகையினால் தீர்மானம் இன்று நிறைவேறுமா என்னும் விஷயமாய் சந்தேகமிருக்கிறது.

### ஷரத்தை மாற்றவேண்டியதில்லை

சங்கக் கூட்டம் திரும்பவும் விவாதம ஆரம்பித்தபொழுது பிரஞ்சு அக்கியநாட்டு மந்திரி எம். டெல்போஸ் பேசியதாவது:-

சங்கம் பயன்படாமல் போனதற்குக் காரணம் ஷரத்துப்படி சரியான கூட்டு நடவடிக்கைகள் எடுக்காமலிருந்ததேயாகும். அதனால் ஷரத்தில் தப்பித மிருப்பதாகச் சொல்ல முடியாது. ஆகையினால் பிரான்ஸ் ஷரத்தைமாற்ற விரும்பவில்லை. அதன் பலனை அதிகரிக்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்றே பிரான்ஸ் நினைக்கிறது. அடுத்த கூட்டத்தில் 11வது 16வது ஷரத்தைப்பற்றி உறுதியான வியாக்யானம்செய்யப்படவேண்டும். ஆக்கிரமிப்பைத் தடுக்க கவுன்சில் ஏகமனதாய் தீர்மானிக்கவேண்டும என்னும் விதிமுறையானதல்ல. சமாதான முயற்சி பலிக்கவில்லையானால் யுத்தத்தைத் தடுக்க கவுன்சில் ஏகமனது என்பதைக் கவனியாமலே தீர்மானம் செய்ய விதியிருக்கவேண்டும்.

கூட்டுக் கமிட்டி ஜூலை 10க்கு மேல் 15க்குள் நிர்ப்பந்தங்களை நீக்குவதற்கு நாள் குறிப்பிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### இத்தாலிக்குத் திருப்தி

இன்றிரவே நிர்ப்பந்தங்கள் நீக்கப்படலாம். அதனால் வேறு அதிருப்திப்படக் காரணமில்லையானால் திங்கட்கிழமை யன்று மாண்ட்ரீக்ஸில் நடக்கும் டார்டனல்ஸ் மகாநாட்டில் இத்தாலி கலந்துகொள்ள வழி ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

# மறியலால் வந்து மக்களைப் பார்ப்பாய்

## எதிரிக்கு நீதிபதி உபதேசம்

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் இரண்டாவது வழக்காக அச்சுவேலியில் வசிக்கும் நாகன்-தவசி தன்னுடையபெண்சாதியாகிய கதிரி என்பவளை அடித்துக்கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கில் எதிரி தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டான். எதிரி நீதிபதியிடம் தன்னில் இரக்கம காட்டும்படி மன்றாடி நின்றான். எனக்கு மூன்று குழந்தைகள் (11, வயது, 8வயது, 6மாசம்) உண்டு. இக்குழந்தைகளைப் பார்ப்பதற்கு வேறுயாரும் கிடையாது. ஆனபடியால் பிள்ளைகளை என்னசெய்வதெனத் தனக்குத் தெரியவில்லை என்று சொன்னான்.

நீதிபதி எதிரியை விளித்துக் கூறியதாவது:—

உனக்கு உதவி செய்தற்காக வழக்கு முழுவதையும் மிகவும் ஆராய்வாக வாசித்துப்பார்த்தேன் நீ புத்தியாக ஓர் முறையில் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டது மிகவும் நல்லது. ஆனால் உதவிக்கு ஆருமற்ற உனது மனைவியைக் கொலை செய்து விட்டாய் உனக்கு இப்போது மிகவும் குறைந்த மறியல் தீர்க்கிறேன் உனது பிள்ளைகளைப் பாதுகாப்புக்குச் சிறியதாயுடன் ஒழுங்கு செய்கிறேன். மறியலால் திரும்பிவந்து உனது பிள்ளைகளைக் கவனமாகப் பார்ப்பாய் என்று நினைக்கிறேன் என்று சொல்லி 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

### சீட்டாடினோர்க்கு அபராதம்

காங்கேசன் துறையிலுள்ள ஓர் மப்பத் தயாரிக்கும் வீட்டில் (1) M. செல்லையா, (2) K. பண்டாரம், (3) N நாகன் (4) P. R. பொனுன்சேட், (5) G. மெண்டிஸ், (6) J ஜேசபிலே, ஆகிய அறுவரும் சீட்டாடினர்களெனக் குற்றஞ்சாட்டிய வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். நீதிபதி எதிரிகட்கு ஆளுக்கு 5 ரூபா அபராதம் விதித்தார். காசுகட்டத்தவறினால் 10 நாள் மறியல் இருக்க வேண்டும் எனவும் தீர்க்கப்பட்டது

# கற்பழித்த வழக்கு

## காரிகை கருப்பவதி

எட்டியாந்தோட்டையில் வசிக்கும் லீலாவதியென்னும் 16 அல்லது 17 வயதுச் சிறுமி யாழ்ப்பாணத்திற்குப் பத்து வருஷத்துக்கு முன் கொண்டுவரப்பட்டாள். இச்சிறுமியை யாழ்ப்பாணம் புகைநப்பகுதிக் கந்தோரில் கிளாக்காயிருக்கும் இராசையா வீட்டிற்குக் கறேலிஸ் என்னும் சிங்களச் சிறுவன் வேலைக்காக விட்டிருந்தான். மூன்று சிங்கள வாலிபர் அவளைக் கற்பழித்ததாக வழக்குத் தொடரப்பட்டது. அவள் இப்போது மூன்று மாசக் கருப்பவதியாயிருக்கிறதாகவும் கோட்டில் கூறப்பட்டது. (1) பண்டா, (2) கறேலிஸ், (3) சைமன் இம்மூவரிலும் லீலாவதி கறேலிஸைப் புருஷனாக ஏற்க மறுத்தாள். ஆனால், தான் சைமனையே புருஷனாக வைத்திருக்க விரும்புவதாகக் கூறினாள். நீதிபதி வழக்கை 27-7-36 க்குத் தவணையிட்டார்.

### சிலியின் யோசனை

ஸாண்டியாகோ டிசிலி 4—

இத்தாலி அபிசீனியத் தகராறு விஷயமாய் சிலியின் பிரதிநிதி வாக்குச் செய்யவேண்டாம் என்று சிலியின் அரசாங்கம் உத்தரவு செய்திருக்கிறது. சங்க ஷரத்து நடைமுறைக்குப் பொருத்தமாக மாற்றப்படவில்லையானால் சிலி சங்கத்தை விட்டு விலகும் என்று சிலியின் அந்நியநாட்டு மந்திரி சொல்லுகிறார்.

### இத்தாலி மந்திரிசபை

ரோமாபுரி 4—

இன்று சங்கக் கூட்டத்தைப் போல் இத்தாலிய மந்திரி சபையும் கூடி ஜெனிவா நடவடிக்கையைப் பற்றிக் கவனிக்கும். மந்திரிசபை கூட்டத்திற்குப் பின் ஓர் அரசாங்க அறிக்கை வெளியிடப்படலாம்.

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோடு

# "பலந்தோப்புள் பலாத்காரமாகக் கற்பழித்தான்"

## சின்னப்பெட்டை கூறிய சில ருசிகரமான சம்பவங்கள்

## எதிரிக்கு விடுதலை

யாழ்ப்பாணம் சுப்பிறீங்கோட்டில் முன்றாவதாக மயிலிட்டியில் வசிக்கும் விருசி — முருகன் என்பவன் கட்டுவனில வசிக்கும் சித்தனுடைய மகள் சின்னப்பெட்டை என்னும் 16 வயதுக்கும் 18 வயதுக்கும் இடையேயுள்ள சிறுமியைப் பலாத்காரமாகக் கற்பழித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு A. H. R. வீரசூரியாவும் எதிரி சார்பாக திரு. S. J. தப்புவும் திரு T. C. இராசரெத்தினமும் வாதித்தனர்.

டாக்டர் திரு K. இராசாசாட்சியப் கூறியதாவது:—

"சின்னப் பெட்டைக்கு உத்தேசம் 16 அல்லது 18 வயதிருக்கும்; அவள் முன்னும் பல முறைகளில் ஆடவருடன் சம்போகஞ் செய்திருக்க வேண்டும்; அவள் இதற்கு உடன்தையாயிருக்கவில்லை என்று சொல்ல முடியாது அப்படி அவள் மறுத்திருப்பாளானல் உடம்பில் காயங்கள் காணப் பட்டிருக்கும். எதிரிக்கும் காயங்கள் கிடையாது"

இதன்பின் சித்தனுடைய மகள் சின்னப்பெட்டை கூறியதாவது:—

எனது தகப்பனர் இறந்து விட்டார். நான் தாயாருடன் இருந்து வருகிறேன்; என்னை வீட்டில சின்னப் பெட்டை என்றுதான் அழைப்பார்கள். பதிவுப்பெயர் எப்படியோ எனக்குத் தெரியாது,

சென்ற தை மாதம் 6ந் தேதி பொழுது அஸ்தமிக்கும் நேரத்தில் நான் எனது பெரிய தகப்பனர் வீட்டுக்கு உப்பு வாங்குதற்குச் சென்றேன். அங்கே ஒருவருமில்லாமையால் நான் எனது வீட்டுக்குத் திரும்பினேன்; திரும்பிவரும்போது எதிரி எனது கையைப் பிடித்து அருகாமையிலுள்ள ஓர் வடலிக் கூடலுக்குள் இழுத்துச்சென்றான் நான் ஐயோ ஐயோ எனச் சத்தமிட்டேன் எதிரி சத்தம் போடாதபடி எனது வாயை மூடினான். எனது ஆடையையும் களைந்தான். எனது விருப்பத்துக்கு மாறாக என்னுடன் புணர்ந்தான் நான் என்னை அவனிடமிருந்து விடுவித்துக்கொள்ள முயன்றேன். முடியவில்லை. அவன் என்னைப் புல்தரையிலேயே விழுத்தினான்.

இதன் பின் கந்தனும், பொன்னனும் வருவதைக்கண்டதும் எதிரி ஓடிவிட்டான். நான் இவ்விருவருக்கும் கள்ளுச் சீவுகிறவன் என்னை இப்படியான நிலைமையில் விட்டுவிட்டு ஓடிவிட்டானெனச் சொன்னேன். அல்லாமலும் என்னை எனது வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய்விடும்படியும் அவர்களை மன்றாடிக் கேட்டேன். அவர்கள் என்னை எனது வீட்டுக் கருகாமையிற் கூட்டிச்சென்று எனது தாயாரிடம இதைப்பற்றிச் சொல்லும்படி கூறிச் சென்றார்கள். இதன்பின் நான் விதானை வீட்டுக்கு புத்தினி என்னும் எனது பெரிய தகப்பனுடன் சென்றேன். விதானைக்கு வாக்குமூலம் கொடுத்தேன்-"

குறுக்கு விசாரணையின்போது சின்னப்பெட்டை கூறியதாவது:—

த: நீ ஒருவரோடும் சம்போகஞ் செய்திருக்கவில்லையா?

சி: இல்லை,

த:- நீ முன் வேலைசெய்துகொண்டு நின்ற அரிசிகுத்தும் மில்லைப்பற்றி உனக்கு ஞாபகமிருக்கிறதா?

சி:- நான் அப்படி ஒரு மில்லின் வேலை செய்யவில்லை.

த:- உன்னை வேலையிலிருந்து முதலாளி நீக்கினது ஞாபகமிருக்கிறதா?

சி:- நான் அங்கே வேலைசெய்யவுமில்லை நீக்கப்படவுமில்லை.

த:- இன்றையளவில் உன்னோடு ஒருவரும் சம்போகம் செய்யவில்லையா?

சி:- இல்லை.

த:- சம்போகம் என்றால் உனக்கு என்ன என்று தெரியாதல்லவா?

சி:- ஆம்

த:- எதிரி எவ்வளவுகாலமாகக் கள்ளுச் சேர்ப்பதில ஈடுபட்டிருந்தான்

சி:- ஒருவருஷகாலம்

த:- நீ அவனைத் தினமும்சந்திக்கின்றவளல்லவா?

சி:- இல்லை, சில சமயங்களில் காண்பதுண்டு

த:- இது சம்பவத்துக்கு முன் ஏறக்குறைய எத்தனை முறை எதிரியைச்சந்தித்திருப்பாய்?

சி:- 15 அல்லது 20 தரம் சந்தித்திருப்பேன்.

சி:-நான் வேறு ஆட்களுடன் கூலி வேலை தேடிச் செல்லும் காலங்களில் இவனைப் பல தடவை சந்தித்திருக்கிறேயா!

சி:- ஆம்

த:- இவனைமரத்தில் கண்டிருக்கிறாயா?

சி:-ஆம்

த:- இவன் மரத்தில் ஏறும்போதும் இறங்கும்போதும் கண்டிருக்கிறாயா?

சி:- ஆம்

த:- நான் நினைக்கிறேன் இவனை மற்றவர் கூப்பிடுகிறதை நீ கேட்டிருப்பாயென்று?

சி:- இல்லை

த:- இவனுடைய பெயர் உனக்குத் தெரியுமா?

சி:- இல்லை

த:- இன்று வரையில் இவனுடைய பெயர் தெரியாதா?

சி:- இதன் பிறகு எனக்குத் தெரியும்

த:- நீ உப்பு வாங்கச் சென்றாயல்லவா?

சி:- ஆம்

த:- நீ உடையாருக்கு இதைப் பற்றிச் சொல்லவில்லை. ஏன?

சி:- நான் சொன்னேன்

த:- நீ உனக்குத் தேவையான உப்பு வாங்க எவ்வளவு காசு வேண்டும்; அரைச்சதம் போதுமல்லவா?

சி:- ஆம்

த:- எதில் உப்பைக் கொண்டுபோகச் சென்றாய்?

சி:- எனது மடியில்

த:- உனது பெரிய தகப்பன் வீட்டில் யாருமில்லையல்லவா?

சி:- ஆம்

த:- நீ உப்பைத் தேடி எடுத்தாயா!

சி:- இல்லை. படலை கட்டப்பட்டிருந்தது.

த:- உனது வீட்டுக்கருகில் இருக்கும கடையில் உப்புவாங்க முடியாதா?

சி:- என்னிடம் காசு இல்லை

த:- நீ சென்ற வழி உன் பெரியப்பா வீட்டுக்குப் போதற்கு மிகக் கிட்டின வழியல்ல

சி:- இல்லை. நாங்கள் அந்த வழியாலுய போவதுண்டு

த:- அவ் வீட்டுக்குக் கிட்டினவழி வேறு இல்லையா!

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அர னாமமே
சூழ்க வையக மூக்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவரு
ஆனிமீ உகூ வியாழக்கிழமை

## அவமானத்தின் மேல் அவமானம்.

அபிஸீனியா சம்பந்தமான விஷயத்தை முஸோலினி என்று ஆரம்பித்தாரோ அன்றே சர்வதேசசங்கத்தையும் சனியன் பிடிக்கலாயிற்று. முன்பு மஞ்சுகோவைப் பலிடாகக் கொடுத்தபோது, இச்சங்கம் சீனுவுக்குப் பெருந்துரோகம் விளைத்தது ஆயின், அதனை உலகம் அத்துணை அநுதாபத்தோடு நோக்கவில்லை. இப்போதோ, ஐரோப்பாவின் சமாதானத்தைக் காப்பாற்றுதற்காக, அபிஸீனியா களப்பலியாகக் கொடுக்கப்பட்டமை உலகம் முழுவதுக்கும் அநுதாபத்தை விளைத்துவிட்டது. சர்வதேச சங்கத்திற்கும் அவமானத்தின் மேல், அவமானம் ஏற்படலாயிற்று. இன்னும் அந்த அவமானம் வளர்ந்துகொண்டே வருகின்றதன்றிச் குறைந்தபாடில்லை. அபிஸீனியாத் தொந்தரவை ஒருவாறு முடித்துக்கொண்டு அடுத்த காரியங்களை எடுத்துக்கொள்வோம் என்று சங்கம் கருதிற்று. கருதியபடி கருமம் ஆற்றும் நோக்கத்தோடு ஜூன் மீ 30ந் திகதி கூடிற்று. இக்கூட்டத்தில் நிகழ்ந்த விபரீத சம்பவங்கள் மிகப்பல வாகும். பார்த்தோரெல்லாம் பரிகசிக்கக்கூடிய பரிதாப நிலையில் சங்கம் இப்போது கிடக்கின்றது, ஆரம்பதினத்தில் அதன்கூட்டத்தில் சில இத்தாலியர்கள் "பூ" என்றும் "ஹா" என்றும் கத்திக் கூக்குரலிட்டனர். அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இது முஸோலினி முனிவருக்குச் சீற்றத்தை உண்டுபண்ணிவிட்டது.

இச்சம்பவம் நடந்ததற்குப் பின், கூட்டம் நடந்துகொண்டிருக்கும் போதே "இதுதான் கடைசி வேலை" என்னும் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டே ஒரு யூதர் தானே தன்னைச் சுட்டுக்கொண்டு உயிர் நீத்தார். தற்கொலை செய்வதற்கு வேறிடமில்லையா? சர்வதேசசங்கக் கூட்டந்தானு அதற்கும் இடமாகவேண்டும்? இதைவிடத் துர்ச்சகுனம் வேறு எதுதானுண்டு? அபிஸீனியாத் தொந்தரவு நீங்கிற்று. இனி எவ்வாறும் ஐரோப்பாவில் சமாதானத்தை ஏற்படுத்திவிடுவோம் என்று மனப்பால் குடித்து மகிழ்ந்த சங்கத்தார் காண மிக்க அருவருப்பான இத்துர்ச்சகுனம் நிகழ்வதாயிற்று.

இதுமாத்திரமா? ஈற்றில் டான்ஸிக் நாஸித் தலைவர்கூட அதனை அவமதித்துப் பரிகாசஞ்செய்யத் தலைப்பட்டுவிட்டார். இதனை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ள தந்திச்செய்தி கூறுவது காண்க. தலைவர் ஹேர் கிறிஸர் நடந்துகொண்ட முறையை நோக்குமிடத்து வெறுங் கோமாளித்தனமாகவே காணப்படுகின்றது. அவர் பேர்லினிலிருந்து பறந்து வந்தார். சங்கக் கட்டிடத்திற்குள் நுழையும்போதே பொலிஸார் அவரை நுழையவிடாது தடுத்தார்கள். அதுவே அவருக்குப் பெருங் கோபத்தை உண்டுபண்ணிற்று. பின் ஒருவாறு அநுமதி பெற்றுச் சங்கத்தினுள் நுழைந்ததும், டான்ஸிக் கமிஷனரை எவ்வளவு தூரம் தாக்கிப்பேச முடியுமோ அவ்வளவு தூரம் தாக்கிப் பேசினர். கையிலிருந்த பத்திரங்களை மேசை மீது எறிந்தார்; இப்பொழுதுதான் எனது மனக்கவலை மாறிற்று என்று கூறித் தனது மனத்திலுள்ள ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டார். சங்கத்தின் முடிவை அறிந்துகொண்டு, இந்த உறுதியற்ற சங்கத்திடமிருந்து எதிர் பார்த்த விஷயங்தானே எனக் கூறி ஈடன் முதலியோர்க்கு அலட்சியமான முறையில் நாஸி வணக்கஞ் செய்தார். இவரது கோமாளித்தனத்தைக் கண்ட சங்கத்தில் சிறிது பரபரப்பு ஏற்படவே, அவருக்குக்கோபம் அதிகரித்தது. மூக்கில் விரலை வைத்தார். "பத்திரம்" என்று பயமுறுத்தினர். பொலிஸார் அவரைக் காவலோடு வழியனுப்பி வைத்தார்கள். இதன்பின், திரு. அந்தோனி ஈடன் எழுந்து நின்று, அவரது நடத்தையைச் சங்கத்திலுள்ளவர்கள் பொருட்படுத்தக்கூடாதென்றும் அதை மறந்துவிடுதல்வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். மேலும், சங்கத்திற்கு அதிகாரந்தான் இல்லாவிடினும் மரியாதையேனும் இருக்கக்கூடாதா என்று அவர் பரிந்து பேசினர். இதற்கு ஓர் அங்கத்தவர் எழுந்து தக்க பதில் இறுத்திருக்கின்றார் "காலையில் அபிஸீனியா விஷயமாகத் தீர்மானித்ததன் பலன் இது" என்பதே அவர் இறுத்த பதிலாகும். இதுவன்றோ பதில்! முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்பதன்றோ பழமொழி?

ஜென்ம விரோதிகளாக இருந்த ஜேர்மனியும் போலந்தும் இப்போது தம்முள் ஓர் ஒப்பந்தஞ்செய்திருக்கின்றன. அந்த ஒப்பந்தப்படி, டான்சிக்கை ஜேர்மனி எடுத்துக்கொள்வதற்குப் போலந்து சம்மதித்திருக்கிறதாகக் கூறப்படுகிறது இவ்வாறு அவ்விரண்டு நாடுகளும் தம்முள் ஒத்துக்கொண்டபோது சங்க கமிஷனர் அதில் ஏன் தலையிடுதல் வேண்டும் என்றே ஜேர்மன் பத்திரிகைகளும் கேட்கின்றன. ஆகவே, முஸோலினிக்கு அஞ்சி அபிஸீனியாவைப் பலிகொடுத்த சங்கம், ஜேர்மனிக்கஞ்சி டான்சிக்கையும் ஜேர்மனி எடுத்துக்கொள்ளுதற்கு இடமளிக்கும் போலும். அதுவும் நிகழுமாயின், அதன்பின் சங்கம் எங்கு உண்டு. இப்போது சங்கம் தான் விதைத்ததையே அறுக்கின்றது என்றே கூறக்கிடக்கின்றது.

## பொதுஜனவுரிமைப் பாதுகாப்பு

இந்திய தேசிய மகாசபைத் தலைவராகிய பண்டித ஜவஹர்லால் அவர்களின் உள்ளத்தே அரும்பிய பொதுமக்கள் உரிமைப் பாதுகாப்புச்சங்கம் சிறிது சிறிதாக உருப்பெற ஆரம்பித்திருக்கின்றது. இச்சங்கம் மிதவாதிகள் கருத்துக்கு ஒவ்வாததொன்றாயினும் இந்தியாவுக்கு இன்றியமையாதது என்பதை அம் மிதவாதிகள் கூட ஒத்துக்கொள்கின்றனர்.

அமெரிக்கா, பிரிட்டன் ஆதியாம் நாடுகளிற் கூட, இத்தகைய சங்கங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஜனநாயக ஆட்சி முறை நன்கு கைவரப்பெற்ற இந்நாடுகளில்தானும், பொதுஜனங்களின் மீது அரசாங்கம் அவசியமின்றிக் கட்டுப்பாடுகளை அமையாவண்ணம் அரசியற் கட்சிகளோடு சம்பந்தமில்லாத பொது ஸ்தாபனங்களாக இச்சங்கங்கள் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கின்றன. அங்ஙனமாயின், அடிமைத்தளையிற் பிணிப்புற்றுக் கிடக்கும் இந்தியாவில் அவை எத்துணை அவசியம் என்பது சொல்ல வேண்டியதில்லை. இந்தியா சுதந்திரமற்ற நாடு; அதனை ஆளும் அந்நியர் அதன்மீது ஓயாது சந்தேகமே கொண்டுள்ளனர். தேசாபிமானம் அரசாபிமானத்தோடு பொருதுகின்றது. தேசாபிமானம் தலை காட்டும்போதெல்லாம் அதனை நசுக்கிவிடுதற்கு அரசாபிமானம் கங்கணங்கட்டி நிற்கின்றது. அவசரச் சட்டங்களும் அடக்குமுறைகளும் தாண்டவ மாடுகின்றன. அவை தேசியம் நிறைந்த சீமான்களுக்குத் தீங்கை விளைத்துக் கொண்டே இருக்கின்றன. எக்கோரத்தில், எவருக்கு என்ன கதி நேரும் என்று கூறுவதற்கில்லை. நிரபராதிகளான சுபாஷ் சந்திரபோஸ் போன்ற உத்தம தேசபக்த சிரோன்மணிகள்—விசாரணையின்றி—போதிய ஆதாரமின்றி—சந்தேகத்தின் பேரிலேயே காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். ஜவஹர்போன்ற இந்திய தேசிய மகாசபைத் தலைவர்கள் கூடத் தமது வாழ்நாட்களிற் பெரும்பாகத்தைச் சிறைக்கூடங்களிலேயே கழிக்கவேண்டி நேரிடுகின்றது. எத்தனையோ இளஞ் சிங்கங்களும், நாரிமணிகளும் சிறைவாசத்திலேயே தமது உயிரை நீத்தனர். இத்தகைய ஒரு பரிதாபகரமான நிலை நிலவும் ஒரு நாட்டில் பொதுஜன உரிமைப் பாதுகாப்புச் சங்கம் ஒன்று இருத்தல் மிகமிக அவசியம் என்பது கூறுதேபோதரும்.

இச் சங்கம், அரசாங்கத்தாரின் வாய்ப்பூட்டின்றிப் பேசவும், பொதுக் கூட்டங்கள் நடத்தவும், பொதுமக்கள் தமது கருத்துக்களை அச்சமின்றி வெளியிடவும் அவர்களுக்கு உரிமை யிருத்தல் வேண்டுமெனறு வாதாடும் பத்திரிகைகள்மீது அரசாங்கத்தார் கொண்டுவரும் கட்டுப்பாடுகள் இருத்தல் கூடாதென்று எடுத்துக்காட்டும். அவசரச் சட்டங்கள், விசேஷ அதிகாரம் ஆதியனவற்றால் மக்களது சுதந்திரம் பறிமுதல் செய்யப்படக் கூடாதென்றும், நீதிமன்றங்களில் முறையாக விசாரணை நடத்தாமல் ஜனங்களைக் காவலில் வைக்கக் கூடாதென்றும், தேசப்பிரஷ்டம் செய்யக் கூடாதென்றும் வற்புறுத்தும். இவ்வாறே இதுபோன்ற பொதுஜன உரிமைகளைப் பாதுகாத்தற்காக நேரியமுறையில் அது நடந்துகொள்ளும்.

இந்தியாவில் எதிர்காலத்தில் சுய ஆட்சி ஏற்பட்டாலும்கூட, சிலரது சர்வாதிகாரங்கள் ஏற்பட்டு ஜனங்கள் தமது உரிமைகளை இழந்துவிடாமற் காத்தற்கு இத்தகைய ஒரு சங்கம் மிக முக்கியமானதாகும். இத்தாலி ஜெர்மனி ஆதியாம் சுதந்திர நாடுகளிற்கூட, பாஸிஸ்ட் இயக்கம், நாஸி இயக்கம் என்னும் இயக்கங்களால் பொதுஜனங்களது உரிமைகள் பறிமுதல் செய்யப்பட்டிருத்தலை காம் காண்கின்றோமன்றோ? இச் சங்கத்திற்கு ஸ்ரீமதி சரோஜினிதேவியைத் தலைவராகக் கொள்ளுதலே அதற்குப் பலரது ஆதரவையும் அளிக்கும் என்னும் எண்ணம் இருந்து வருகிறது.

இஃது எக்தக் கட்சியையும் சேர்ந்ததாக இருக்காது. இந்தியாவிலிருக்கும் எவரும், இதன் நோக்கங்களை ஏற்றுக் கொண்டு அதற்குரிய கட்டணத்தைக் கொடுத்து அதில் அங்கத்தவராக வருதற்கு அருகராவர். இந்தியாவிலுள்ள சகல கட்சியினரும் இச்சங்கத்திற் சேர்ந்து அதன் முன்னேற்றத்தைநாடி உழைப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனமாயின், இச் சங்கம இந்திய தேசிய மகாசபைக்குப் பெரியதோர் அரணுகின்றமை குறிக்கத்தக்கது.

## நாகநாத அதிகாரம்

இம்முறை, மன்னர் வெள்ளி விழாவின்போது வழங்கப் பெற்ற பட்டங்களுள் அதிகாரப் பட்டம் இலங்கையில் ஒருவருக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வொருவரும் யாழ்ப்பாணத்தவர். அவரும் சைவமதத்தைச் சார்ந்தவர்; புராதன பெருமையோடு கூடிய உயர்குடியிற் பிறந்தவர். அவரும் நமது சைவபரிபாலனசபையின் தலைவர். ஆனது பற்றி, இராசவாசல் முதலியார் அ. நாகநாதர் ஜே. பி. யூ பி. எம். அவர்கள் பெற்ற அதிகாரப்பட்டம் நமக்கெல்லாம் இறும்பூது பயக்குமொன்றாகும். இன்னும் ஒன்று இங்கு குறிப்பிடத்தக்கது. இதுகாறும் இப் பட்டம் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகத்தருக்கே வழங்கப்பெற்று வந்தது. அரசாங்க உத்தியோகத்தவர்கள் அல்லாதவர்களில் முதலாம் முறையாக அதிகாரப்பட்டம் பெற்றவரும் நமது நாகநாத அதிகாரம் அவர்களே ஆவர். நாகநாத அதிகாரம் அவர்கள் தமது நாட்டாரின் நன்கு மதிப்பைப் பலதுறைகளிலும் பெற்றவர். அவர் ஒரு சிறந்த விவசாயி, சிறந்த தேசாபிமானி; பாஷாபிமானி; சமயாபிமானி. அவரது தரும உதவி பெறாத சங்கங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லையென்று கூறினும் அமையும். பல சங்கங்களில் அவர் தலைவராக இருந்து பணியாற்றி வருகின்றார். அவர் ஈகையிற் சிறந்தது மாத்திரமன்றி எவரோடும் இன்முகங்காட்டி இனியன மொழியும் இயல்பு வாய்ந்தவர்.

ஆகவே, எவ்வாற்றானும் தகுதி வாய்ந்த ஒரு பெரியாரை அரசாங்கத்தாரும் தெரிந்தெடுத்து அதிகாரப்பட்டம் வழங்கியமை பாராட்டத்தக்கதேயாம். நமது அதிகாரம அவர்களும் இதனால் ஊக்கமடைந்தாராய் இன்னும் பல புண்ணிய கைங்கரியங்களி லீடுபட்டு அவற்றிற்குப் பொருளுபகரித்தும் தொண்டாற்றியும் புகழுடம்பை என்றும் நிலவச்செய்து கொள்வாராக. அவருக்கு நீண்ட ஆயுளையும் சகல பேறுகளையும் அளிக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுதும்.

# நவாலியிற் கலகம்

## எதிரிகளிற் பலருக்குக் காயம்

## கடையில் தீ

இம் மாதம் 6-ந் திகதி நவாலியில் ஒரு கலகம் நடைபெற்றது. அதன் விளைவாக இன்று நவாலி விதானை பொலிஸ்கோட்டில் வழக்குத் தொடர்ந்தார். அவர் கூறியதாவது:-

வி. பொன்னு, வி. நாகலிங்கம், வி. ஏரம்பு, கன்னிகணபதிப்பிள்ளை, சின்னப்பொடி சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை மருதப்பு, சின்னத்தம்பி முத்துச்சாமி, முருகேசு கதிரவேலு உள்படப் பெருந்திரளானவர்கள் தடிகளும், கற்களும், கத்திகளும் கொண்டுவந்து வழக்காளியின் கடைக்குள் நுழைந்து வழக்காளியையும், வழக்காளியின் தகப்பனையும், சகோதரனையும், அடித்ததாகத் தம்பு செல்வத்துரை என்பவர் என்னிடம் வந்து தெரிவித்தார். வல்லிபுரத்தின் மனைவி கடைக்கு நெருப்பிட்டதாகச் சொல்லப்பட்டது. கலகத்திற் பலர் காயமுற்றனர். காயமுற்றவர்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டார்கள்.

இவ்வழக்கு இம்மாதம் 21-ந் திகதி விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்படுமெனக் குறிக்கப்பட்டது.

## நாகநாத அதிகாரத்திற்குப் பொதுஜன வரவேற்பு

### வரவேற்புக் கமிட்டித் தெரிவு

நேற்றுக் கூடிய ஒரு கூட்டத்தில், திருவாளர் நாகநாத அதிகாரம் அவர்களுக்குத் தகுந்த வரவேற்புக் கூட்டம் ஒன்று வைத்தற்குத் தீர்மானித்து அதற்குரிய ஒழுங்குகளைச் செய்வதற்குடக்டர் இ மக்கின்டைத் தலைமையாகக் கொண்ட ஒரு வரவேற்புக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

திருவாளர்கள் சி. பொன்னம்பலம் எஸ் ஆர். கனகநாயகம் என்னும் இருவரும் அதன் காரியதரிசிகளாகவும், திருவாளர் எஸ். அப்புத்துரை, முகாந்திரம் வி. பொன்னம்பலம் என்னும் இருவரும் பொக்கிஷதாரிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

வரவேற்புக் கூட்டத்தை ஜூலை மாதம் 20 ந் திகதி நடத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## நாகநாத அதிகாரத்திற்கு வரவேற்பு

### தலைவர் பாராட்டு

திரு. நாகநாத அதிகாரம் அவர்களுக்குச் சென்ற ஞாயிற்றுக்கிழமை பண்டு சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மண்டபத்தில் ஒரு வரவேற்பு நடைபெற்றது. அதிகாரம் அவர்கள் வடக்கம்பரை மாரியம்மன் கோவிலடியிலிருந்து ஓர் தண்டிகையில் அவரது குடிப்பக் கோவியர் 40 பேரால் தூக்கிச் செல்லப்பட்டார்.

கல்லூரி மண்டபத்தில் திரு. நடேசபிள்ளையின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மிக அழகான ஓர் வரவேற்புப் பத்திரம் படித்து வழங்கப்பட்டது.

ஈற்றில், திரு. நடேசபிள்ளை அவர்கள் பேசுமிடத்து, நாகநாத அதிகாரம் அவர்கள் அவருக்கு வழங்கப்பெற்ற பட்டத்திற்கு முழுதும் தகுதி யுடையவர் என்றும், அவர் சரித்திர சம்பந்தமாகவே புகழ்பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும், தமிழ்ச் சமூகத்தாருக்கு அவர் பெரிய மேன்மைகள் செய்துள்ளாரென்றும், கல்வி சம்பந்தமாகவும் அவர் பல தருமங்கள் செய்திருக்கிறரென்றும், யாழ்ப்பாணத்தில் மரவரியைக் கொண்டுவருதற்கு நாகநாத முதலியார் ஆரம்பத்திலே வேலைசெய்து வந்தவரென்றும் தெரிவித்தார்.

மேலும், முதலியார் செல்லப்பா, திருவாளர்கள் வி. வீரசிங்கம், என். சேனாதிராஜா, என். சேதுகாவலர், ஆதியோர் பேசியபின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## நீகஸ் இனி என்ன செய்வார்?

ஜெனிவா, 6வ

மாஜி அபிசீனிய சக்கரவர்த்தியைச் சர்வதேச சங்கம் பூரணமாகக் கைவிட்டுவிட்டது ராஜ்யம் திரும்பக் கிடைக்கவில்லையென்றாலும் ஒருகோடிபவுனாவது கடனகிடைக்குமென்று அவர் நினைத்தார். இதற்கும் சர்வதேச சங்கம் கையை விரித்துவிட்டது. அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்ட நிலைமையிலேயே இப்பொழுது நீகஸ் இருக்கின்றார். முசோலினியிட மிருந்தாவது நீகஸ் ஏதேனும் உதவி எதிர்பார்த்திருக்கலாம். இனி நீகஸ் என்ன செய்யப்போகின்றாரென்பது தெரியவில்லை.

## இலங்கையின் புதிய முத்திரைகள்

லண்டன், 6வ

எட்வர்ட் மன்னரின் ஆட்சி ஆரம்பத்திற்கு அறிகுறியாக பிரிட்டிஷ் சாம் ராஜ்ய நாடுகளின் புதிய தபால் முத்திரைகளின் மாதிரிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை விரைவில் அங்கீகாரம் செய்யப்படும். முடிசூட்டுவிழாவுக்குப் பல மாதங்களுக்கு முன்னரேயே தபால் முத்திரைகள் விற்பனைக்குத் தயாராக இருக்கும். இலங்கைத்தபால் முத்திரையில் சக்கரவர்த்தி கிரீடம் தரித்த எட்வர்ட் மன்னரின் தலை காணப்படும்.

# நாகியைக் கடத்திச் சென்ற நாகன்—முருகன்

## காட்டுக்குள் நடந்த காதற் சங்கதிகள்

## எதிரிக்கு 3 வருஷக் கடுங்காவல்

சென்ற புதன்கிழமை மீச் சேதி யாழ்ப்பாணம் சுப்பிரீங்கோட்டில் நாலாவது வழக்காகச் சுளிபுரத்தில் வசிக்கும் பள்ளவகுப்பைச்சேர்ந்த நாகன்—முருகன் என்பவன் தவ்ஆர் வேலன் - முருகனுடைய 15 வயதுடைய மகள் நாகி என்பவளைப் பெற்றோருடைய பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றதாயும் சட்டவிரோதமாகச் சம்போகஞ் செய்ததாயும் குற்றஞ் சாட்டியவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினன். எதிரிக்காக வாதிக்க ஒருவரையும் நியமிக்கப்படவில்லை. எதிரி தானே தனக்காக வாதித்தான்.

W. F. இரத்தினகோபால் ஜூரித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

முடிக்குரிய நியாயவாதி கூறியதாவது:—

எதிரிமீது இரு குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன. முதலாவதாக நாகியென்னும் சிறுமியை அவளுடைய தகப்பனும் பாதுகாப்பாளனுமாகிய வேலன் - முருகனிடமிருந்து கடத்திச் சென்றது. இரண்டாவதாக அவளுடைய எண்ணத்துக்கு மாறாகவோ அல்லது பலவந்தமாகவோ புணர்ந்தது. இவளுக்குப் பேய் பிடித்திருந்தது. பேய் அகற்றும்படி எதிரி அவளுடைய தகப்பனால் அழைக்கப்பட்டான்.

இச்சம்பவம் நடந்த அன்று (1) நாகி, (2) பெரியான் - முருகனென்னும் சிறுவனுடன் புல்லுச்செருக்கிக்கொண்டிருந்தாள். எதிரி அவ்விடத்துக்குச் சென்று நாகியைக் கையில் பிடித்து இழுத்துச்சென்றான். அவளைப் பக்கத்தே இருந்த கடற்கரையோரமாகக் கூட்டிக்கொண்டு காட்டுக்குட் சென்றான். அவள் அங்கேதானே அன்றிரவும் மறுநாள் பகலும் மறைக்கப்பட்டிருந்தாள் அன்று இரவு எதிரி அவளுடன் இருமுறை சம்போகஞ் செய்தான். மறுநாள் பிற்பகல் அவளை வள்ளி என்பவளுடைய வீட்டுக்குக் கூட்டிச்சென்றனர். நாகியினுடைய தகப்பனர் விதானையுடன் அவளைத்தேடி வள்ளிவீட்டுக்குச் சென்றபோது அங்கே அவளைக் கண்டார்கள். கண்டதும் அவளிடம் வாக்குமூலம் கேட்டு விதானையார் எழுதினர். டக்ருக்கு அவள் இதற்கு முன்னும் இவ்வெதிரியுடன் தான் இரகசிய நட்புற்று இருந்ததாக ஒத்துக்கொண்டாள். கூட இருந்து புல்லுச் செருக்கிக்கொண்டிருந்த முருகன் போய்த் தகப்பனுக்குச் சொன்னதும் அவர் தேடினர். ஆனல் அது பெரும் காடானபடியால் அன்று இவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது.

இதன் பின் டக்ரர் சாட்சியம் கூறினர். அதன் பின் முருகன் மகள் நாகி கூறியதாவது:—

எனக்கு என்னுடைய வயது எத்தனை என்று தெரியாது. நான் சுழிபுரத்தில் வசிக்கிறேன். நான் எனது தகப்பனுடன் தான் இருக்கிறேன்; எனது தாயார் இறந்துவிட்டாள். இந்த எதிரியை எனக்குத்தெரியாது. எதிரி என்ன முறையுடையவன் என்றும் தெரியாது சென்ற தைமீ 16ம் திகதி நான் புல்லுச் செருக்கிக்கொண்டிருந்தேன் என்னுடன் பெரியான்-முருகனும் புல்லுச் செருக்கிக்கொண்டிருந்தான்; எதிரி எனக்குப் பின்புறமாக வந்து எனது கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றான். நான் "ஏன் என்னை இழுக்கிறாய்"? என்று கேட்டேன் அவன் ஓர் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினன்; நான் சத்தம் போட்டேன்; அப்பொழுது என்னுடன் இருந்த பொடியன் "ஏன் இழுத்துச் செல்கிறாய்"? என்று கேட்டபோது அவனுக்கும் ஓர் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினன். அவன் (பொடியன்) ஓடிவிட்டான். எதிரி என்னைக் காட்டுக்குள் கூட்டிச்சென்றபோது பொழுது அஸ்தமித்துவிட்டது. எதிரி என்னோடு பலவந்தமாகச் சம்போகஞ் செய்தான். நான் அப்போது அவனுக்குக் காலால் உதைத்தேன்; அவன் அப்பொழுது ஓர் கத்தியைக் காட்டிப்பயமுறுத்தினன். நான் பயங்காரணமாக ஒன்றும் செய்யாமல் இருந்துவிட்டேன். காட்டில் வேறு யாருமில்லை. நான் அன்று இரவு முழுதும் காட்டில்தான் இருந்தேன் மறுநாள் பிற்பகல் தான் வள்ளிவீட்டுக்கு வந்தேன். வேறு யாரும் எங்களுடன் அங்கு வரவில்லை அப்பொழுது வள்ளி அங்கு இருந்தாள். அங்கே சென்று அரை மணித்தியாலத்துக்குள் விதானையார் அவ்விடம் வந்தார். விதானையார் எனது வாக்குமூலத்தை எழுதினர். எதிரி தனது மைத்துனருக்கு என்னை விவாகம் செய்துகொடுக்கிறதாகக் கூட்டிச் சென்றதென்று விசாரணைக்கு நான் சொல்லவில்லை எதிரி எனது தகப்பனர் இருக்கும் நேரங்களில் தான் பேய்ஓட்ட வருகிறவர். எதிரியை விட வேறு ஒருவரோடும் நான் சம்போகஞ் செய்யவில்லை.

சாக்ஷி குறுக்கு விசாரணையின் போது சொல்லியதாவது:—

எதிரி:- நீ என்னுடைய சிற்றன்னை மகளல்லவா, இல்லை.

எ:- நீ என்னுடன் ஒற்றுமையாய் வந்தாயல்லவா, — இல்லை.

எ:- அப்போது நானும் எனது பணிவியுமாகத் திருவடிநிலைவைரகோயிலுக்குப் போனேமல்லவா — இல்லை.

எ:- உன்னுடைய பாதுகாப்பாளர் உன்னை நிஷ்டூரமாக நடத்துகிறதென்று எங்களுக்கு நீ கூறவில்லையா?— இல்லை.

எ:- நான் உன்னை எங்களுடன் வரவேண்டாமென்று சொன்னபோது, இல்லை பெற்றார் அடித்தாலும் நான் உங்களுடன் வரப்போகிறேன் என்று சொன்னாயல்லவா?—இல்லை.

எ:- நான் உன்னை எனது மைத்துனனுக்கு விவாகம் செய்து வைப்பேன் என்று சொல்லவில்லையா? — இல்லை.

எ:- நீ என்னுடைய வீட்டில் இரண்டுமாசகாலம் வசிக்கவில்லையா; — —இல்லை எனக்கு அந்தவீடு தெரியாது.

எ:- உனது சகோதரன் எனது மச்சாளை விவாகஞ்செய்யவில்லையா? —தெரியாது.

இதன்பின் பெரியான் முருகன்; வேலன் — முருகன்; விதானையார் ஆகியவர்களும் வேறு சிலரும் சாட்சியம் கூறியபின் ஜூரிகள் எதிரியை 1-ம் குற்றச்சாட்டின்பேரில் குற்றவாளியாகவும் 2-ம் குற்றச்சாட்டின்பேரில் நிரபராதியாகவும் ஏகோபித்துக் கூறினர்.

நீதியரசர் எதிரிக்குக் கூறியதாவது நீ செய்த குற்றச்சாட்டிற்கு உன்னைப் பத்துவருஷ மறியலுக்கு அனுப்பலாம் ஆனல் மற்றைய காரியங்களையும் பார்த்து உனக்குமூன்று வருஷக் கடுங்காவல் மறியல் தீர்க்கிறேன் என்று கூறி முடித்தார்.

(நமது நிருபர்)

# கொக்குவிலில் வாள் வீச்சு

## காயமுற்றவன் ஆஸ்பத்திரியில்

எதிரியைக் காணவில்லை

இன்று காலை கோக்குவில் புகையிரத நிலையத்தில் வேலை செய்யும் சின்னத்தம்பி என்னும் ஒரு கூலியாளை இளையதம்பி என்னும் ஒருவன் வாளால் வெட்டினதாகத் தகவல் கிடைத்திருக்கிறது: காயமுற்றவனிலிருந்து இரத்தம் வெள்ளமாக ஓடிக்கொண்டிருந்தது. விதானை உடனே அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனர். எதிரி ஓடி ஒளித்துவிட்டானெனக் கூறப்படுகிறது.

# விதானைக்கு மாஞ்சியால் அடி

## கோட்டு விருந்தையில் நடந்த கோர சம்பவம்

இன்றுகாலை போலீஸ்கோட் விறந்தையில் நவாலி விதானையாகிய சி. நவரத்தினம் என்பவருக்கு ஒருகைதி கைமாஞ்சியால் மோதினன் எனத் தகவல் கிடைத்திருக்கிறது. அடித்த கைதியின் பெயர் முருகன் நாகலிங்கம். இவன் தற்போது மறியலிலிருந்து வருகின்றன். மற்றொரு வழக்குச் சம்பந்தமாக அவன் கோட்டுக்குக் கொண்டுவரப்பட்டான்.

சார்ஜன் அம்சா அவன்மீது வழக்குத் தொடர்ந்தார். அவன் தான் குற்றவாளி அல்ல என்று கூறினன்.

# பழிக்குப் பழி

## மாமியாருக்கு அளித்த உறுதிமொழி

## மருமகனுக்குத் தண்டனை

லாகூர் ஜூலை 3

குலாம் ஹுஸேன் என்ற ஒருவர் அட்டாக் ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக அப்துல்லா என்ற ஒருவருக்கு 7 வருஷக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனல் இறந்தவரின் மனைவி இதற்குப் பழிவாங்க உத்தேசித்துத் தம் பெண்களை மணப்பவரிடம் இதற்காகப் பிறகு பழி வாங்கவேண்டுமென உறுதிவாங்கிக்கொண்டாள். அதன்படி ஒருமருமகன் அப்துல்லா சிறையிலிருந்து வந்தபின் அவனது வீட்டுக்குச் சென்று அவனை அழைத்துக் கத்தியால் குத்திக்கொன்றதாகச் சொல்லப்படுகிறது. அது சம்பந்தமாக மருமகனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதெனினும் அப்பீலில் அவர் விடுதலையடைந்தார்.

# அரசியல் திருத்த விசாரணைக் குழு

கொழும்பு ஜூலை 8 உ

இலங்கை அரசியல் முறையை விசாரித்து அறிக்கை வேண்டிய திருத்தங்களைச் சிபார்சு செய்ய ஒரு கமிஷன் இங்கிலாந்திலிருந்து வரப்போகிறதென முன்னர்க் குறிப்பிட்டிருந்ததல்லவா! இப்போது அந்தக் கமிஷன் எந்தச் சமையத்தில் வருமென்று எதிர்பார்க்கப் பட்டதோ அதற்கு முன்னதாகவே வந்து விடுமென்று ஒரு வதந்தி கிளம்பியிருக்கிறது. இதற்கிடையே இரண்டு வருடத்திற் கொருமுறை மந்திரிமார் தேர்தல் நடைபெற வேண்டுமெனச் சில அரசியல் வாதிகள் கருதுவதாகவும் அறியப்படுகிறது.

# சர்வதேச சங்கத்திற்கு அவமானம்

## டான்சிக் நாஸி தலைவரின் தாண்டவம்

## கூட்டத்திற் குழப்பம்

ஜெனிவா ஜூலை 4 உ

சர்வதேசசங்கம் இன்றையத்தினம், டான்ஸிக் பிரச்னையைப் பற்றிக் கவனித்தது. டான்ஸிக்கில் ஜேர்மன் நாஸிக் கட்சியினரின் நடவடிக்கைகளினல் ஓர் முக்கியமான நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. டனேஸிக் துறைமுகத்திற்கு வந்திருந்த ஓர் ஜெர்மன் யுத்தக்கப்பலின் காப்ரின், சம்பிரதாயப்படி டான்ஸிக் ஹைகமிஷனரைப்பார்த்துமரியாதைசெலுத்தமறுத்துவிட்டார்.

அதிலிருந்து டான்ஸீக் நாஸிகளின் நடவடிக்கைகளினல் ஓர் நெருக்கடி ஏற்பட்டு விட்டது. ஹை கமிஷனர் அது விஷயமாகச் சர்வதேச சங்கத்திற்கு ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறார். அந்த அறிக்கையைச் சங்கக் கவுன்ஸில் இன்று கவனித்தது.

### மிஸ்டர் லேஸ்டரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும்

அந்தக் கூட்டத்திற்கு டான்ஸிக் நாஸி அரசாங்கத்தின் தலைவர் ஹெர் கிரீஸர் வந்தார். அவர் கவுன்ஸிலுக்குப் போகவேண்டிய அனுமதிச்சீட்டு அவரிடமில்லை; அதனல் காவலிருந்த பொலிசார் அவரை உள்ளே விட மறுத்தனர். சமீபத்தில் இத்தாலியப் பத்திரிகை நிருபர்களின் விஷயத்தினலும் ஸ்லெக்கோஸ்லோவாக்கிய பத்திரிகைப் படம் பிடிப்பவரின் தற்கொலைச் சம்பவத்தினலும் சங்கத்திற் காவல் செய்யும் பொலிசார் மும்மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கின்றனர்.

முடிவில் ஹெர் கிரீஸர் சங்கக் கவுன்ஸில் கூட்டத்தில் போய்த் தன் கட்சியை எடுத்துப் பேசினர். அவர் பேசியதாவது:—

டான்ஸிக் ஹைகமிஷனர் மிஸ்டர் லீன்லெஸ்டரின் ஆட்சேபனை டான்ஸிக்கில் மிக அவசரமாகப் பிரசுரிக்கப் பட்டு விட்டது. நான் 4 லட்சம் ஜெர்மனியர்களுக்காகப்பேசுகிறேன். ஹைகமிஷனர் எப்பொழுதும் பெருவாரியானஜனங்களுக்கு விரோதமாகச் சிறுபான்மையோருக்குச் சாதகம் செய்து வந்திருக்கிறார்.

### லேஸ்டர்மீது குற்றச்சாட்டு

மிஸ்டர் லெஸ்டர் ஆதரவிலிருப்பவர்களால் கொல்லப்பட்ட பிரேதங்களைப் போல் யுத்த காலத்திற்கூடப் பார்க்க முடியாது.

மிஸ்டர் லெஸ்டரை அந்தப் பதவியிலிருந்து போகச் சொல்ல வேண்டும்; இல்லாதவரை ஹை கமிஷனர் பதவியையே எடுத்துவிடவேண்டும்; அது தவிர டான்ஸிக் பிரச்சினையைத் தீர்க்க வேறு வழி இருக்காது.

என்பதாக ஹெர் கிரீஸர் ஹை கமிஷனரைக் கடூரமாகத் தாக்கிப் பேசினர்; முடிவில் தன் கையிலிருந்த அறிக்கைகளை மேசைமீது வீசி யெறிந்துவிட்டு "இப்பொழுது நான் சிறிது மனச்சாந்தி அடைகிறேன்" என்று சொன்னர். அவர் நடத்தை எதிர்த்து சங்கக் கவுன்ஸிலுக்கே அவமதிப்பாக இருந்தது.

### தீர்மானம்

போலந்து டான்ஸிக் நகரின் அந்நிய நாட்டு விவகாரத்தை அந்த நகரத்துச் சட்டப்படி மேற்பார்வை செய்ய ஏற்றுக்கொண்டிருக்கிறபடியால் டான்ஸிக் ஹைகமிஷனருக்கும் நாஸிக்கட்சியினருக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறைப் போலந்து தலையிட்டுத் தீர்த்து வைக்கும்படி சங்கக் கவுன்ஸில் முடிவு செய்தது

### "மரியாதைகூட இல்லை"

"சங்க கவுன்ஸில் மிஸ்டர் லெஸ்டர்மீது பூர்ண நம்பிக்கையுடன் இருக்கிறது. ஹெர் கிரீஸர் பேசிய மாதிரியைக் கண்டு சங்கக் கவுன்ஸில் வருத்தமடைகிறது.. டான்ஸிக்கில் தற்சமையமிருக்கும் அரசாங்கத்திற்குச்சங்கம் பொறுப்பு வாய்ந்ததல்ல. ஆனல் சங்கம் அதோடு சம்பந்தம் வைத்துக் கொள்பவர்கள் மரியாதையாக நடப்பார்கள் என்று எதிர்பார்க்கிறது" என்று மிஸ்டர் ஈடன் குறிப்பிட்டார்

### "எதிர் பார்த்ததுதான்"

சங்கம் தீர்மானம் செய்தபின் ஹெர் கிரீஸர் பேசும்பொழுது 'சங்கத்தின் வழவழப்பான நடவடிக்கைகளில் இந்தத்தீர்மானம் தவிர வேறு ஒன்றும் நான் எதிர்பார்க்கவில்லை. டான்ஸிக் செனட் தலைவர் திரும்பவும் இங்கு வரும்படியான நிலைமை இல்லாமல் சங்கம் தீர்மானம் செய்யுமென்று ஜெர்மன் ஜனங்கள் எதிர்பார்த்தனர்' என்று குறிப்பிட்டார்.

கவுன்ஸில் விஷய சூசிகையில் கண்ட விஷயங்களையே கவனிக்கிறது என்று மிஸ்டர் ஈடன் அமைதியாகப் பதில் சொன்னர்.

### கூட்டத்தில் குழப்பம்

கவுன்ஸில் கூட்டம் முடிவடையும்போது ஓர் ஆச்சரியமான சம்பவம் நடைபெற்றது. மிஸ்டர் ஈடன் எம். டெல்போஸ், எம் பாக் மூவரும் ஹெர் கிரீஸர் நாஸி வணக்கம் செய்தார். இதனல் பத்திரிகை நிருபர் காலரியிலும் பொதுஜனங்களின் காலரியிலும் பெரிய இரைச்சலும் ஆரவாரமும் ஏற்பட்டது. ஹெர் கிரீஸர் இதனல் கோபமடைந்ததாக தனது மூக்கின்மீது கையை வைத்தார். இதனல் பத்திரிகை நிருபர்களிடையே டல்ர்த இரைச்சலேற்பட்டது. பலர் ஆட்சேபனை செய்தனர்.

என்ன நடந்தது என்று மிஸ்டர் ஈடனைக் கேட்டபொழுது அவர் சம்பவத்தைப் பார்க்கவில்லையென்றும் ஆனல் அந்த மாதிரி நடந்துகொள்வதை நாம் மனதில் கொள்ளாமல் மறந்துவிட வேண்டுமென்றும் தெரிவித்தார். அதற்குப்பின் டான்ஸிக் கோஷ்டியினர் பொலீஸ்காவலுடனும் ஜனங்களின் கேலியான கோஷங்களுடனும் சங்கத்தைவிட்டு வெளியேறினர்.

### கமிட்டி நியமனம்

சங்கக் கவுன்ஸிலின் அந்தரங்கக் கூட்டத்தில் இதுவரை மிஸ்டர் ஈடனை டான்ஸிக் விஷயமாகக் கவனித்து வந்ததற்குப் பதில் பிரஞ்சு பிரிட்டிஷ் போர்த்துக்கேயப் பிரதிநிதிகள் கொண்ட ஓர் கமிட்டி டான்ஸிக் விஷயமாய்க் கவனிக்கும்படி நியமிக்கப்பட்டது.

வோல்கிட்சர் பியோபாட்சர்" என்னும் பெர்லின் நாஸிப் பத்திரிகை டான்ஸிக் பிரச்னைபற்றி எழுதுவதாவது:-டான்ஸிக்கும் போலந்தும் ஸமாஸமாக அவற்றின் காரியங்களை முடித்துக்கொள்ளும்பொழுது டான்ஸிக்கில் ஹைகமிஷனர் ஒருவர் இருக்கவேண்டிய அவசியமில்லை.

நமது சிறுகதை

# நீரிற் குமிழி.

"கேது"

"இர்-ர்-ர்றச் சவாசு! ஆஅம்... அங்... அட. அவ்வளவு கிறுக்கு பொறுக்கிப் பசங்களுக்கு என்னை அப்படியு அவுங்க மூணுபேரும் தன்விழித்திப்பிடப் பாத்தாங்க. ஹூம்... ம்ம் ஹூம். அடே நில்லுங்கடா, ஓடாதிங்க. நீங்க மூணு பேர் நானு ஒத்தன். வாங்கடா உங்க சமத்தையுங் காட்டுங்கவன்". என்று சொல்லிக்கொண்டே தெருவோரத்தில் சாக்கடை நீரோடுகிற வாய்க்காலிலிருந்து எழும்பித் தட்டித்தவறி மேலே ஏறினன் சுப்பையன். சுப்பையன் ரொம்ப நல்லவன் வெரிலே. சொன்னது தட்டாமலே வேலைசெய்வான். சுப்பையன் சொன்னதெல்லாம் செய்வதோடு கொடுத்ததையும் வாங்கிக்கொள்வான். கொடுக்காமலும் விடலாம். அவனே மூட்டை சுமப்பான், வண்டிவிடுவான், வீட்டு வேலை சகலதுஞ் செய்வான். அவனிலே யாருமே நல்ல அன்பு.

இப்படி நல்ல மனுஷனை இந்தச் சுப்பையனை யார் என் தள்ளிவிழச் செய்திவிட்டு ஓடினர்களோ தெரியவில்லை. சுப்பையன் தெருவில் நிமிர்ந்து நிற்க முடியாமலிருந்தான். திரும்பவு "அடஅடஅ வந்துட்டிங்களா, விடு விடு ... ப்ம்" என்று யாரோ இழுத்து மறித்தது மாதிரி சொன்னன். மேலும் "அடே உங்களைச் சும்மாவா விடப்போறேன், என்னோடா சேஷ்டை பண்றயள. ஓடுங்க பாக்கறேன்" என்றான்.

நேரமோ அப்பொழுது — சனிக்கிழமை— இரவு பதினொன்றரை மணியிருக்கும். நானும் நீகல் டாக்கீஸிலிருந்து விடு திரும்பிப் போய்க்கொண்டிருந்தேன். சுப்பையனின் படி அலைகிறதைப் பார்த்தேன் இதென்ன? படம் அதிக நேரம் விழித்திருந்து பார்த்ததனலோ இப்படிப் பொருட்காட்சியைக் காணுகிறேன் என்று நினைத்தேன். மற்ற முறையும் "வந்துடாங்களா" என்று சுப்பையன் தொடங்கினன். நானும் பயந்துவிட்டேன். அவ்விடத்தில வேறொருவருமில்லை. இவனுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதோ அல்லது பசாசுகளேதையோ காண்கிறனே 'என் றெண்ணினேன், நெஞ்சு படபட என்று குதித்தது. கூர்ந்து கவனித்தேன். சுப்பையன் நின்ற இடத்துக்கப்பாலொரு எலக்டிரிக் விளக்கு எரிந்துகொண்டிருந்தது, அதற்கருகில் ஒரு கம்பத்தில் மூன்று கொடிகள் பறந்துகொணடிருந்தன கடைத்தெருவில் அப்படி விளம்பரக் கொடிகள் வேறும் மெதுவாய் மெல்லிய காற்று வீச அசைந்துகொண்டேயிருந்தன.

மெதுவாய்க் குனிந்து தன்கையினால் வேட்டிததலைப்பைப் பிடிக்கிறதும் "நில்லுங்கடா" என்று கொண்டே கொடுக்குக்கட்டுவதும், பின் ஓடி நீங்களா ...... என்று சொல்லும்பொழுதே மயக்கம் உள்ளவன் மாதிரி வழுவிடுகிறதுமாய் நின்றன் சுப்பையன்: இவன் கொள்ளும் இச்சாகத்தைக்கண்டு நானும் நெஞ்சைத் தட்டிக்கொடுத்தேன் ஒருமுறை "ஓடிறிங்களா" என்று சொல்ல இரண்டு நிமிஷங்களுக்கு முன் அந்த மூன்று கொடிகளின் நிழல் அசைந்தோடினதையுங் கண்டேன்.

மெது மெதுவாகக் கடைத்தெரு வழியாகத் தளளாடிக்கொண்டே போன சுப்பையனை நானும் பின் தொடர்ந்தேன். நான் கனவுலகத்திலோ பசாசுலகத்திலோ பைத்திய உலகத்தில்தானே நிற்கிறேனென்று யோசித்துக்கொண்டு என்வலது தொடையில் கிள்ளினேன். நன்றாக நோரு கொடுத்தது கண்டு கனவுலகமல்லவென்று முடிவு கட்டிக்கொண்டு துணையில்லாமல் போகவும் பயந்து சுப்பையனுக்குப் பின்னால் மறைந்து மறைந்து போனன்.

அவன் "அடியேய்! நில்லு நில்லு. அத்தனை ருங்கியாடி சிலுக்கி ஓடாதடி நில்லடி நலகுட்டி ஏ.... இனமுன நான திருப்பித்திரும்பிப் பார்த்தேன். என்னையுமவனையுந் தவிர வேறொருவரையுங் காணவில்லை. நிகில் வரவர எனக்கதிகமாயிற்று. பனிக்குளிரும் அதிகமாயிருந்தது. சுப்பையனுக்குக் கிட்டப்போகவும் முடியாது. தூரநிற்கவும் நிகில்மேல் நிகில். மெதுவாக "சுப்பையா" என்றேன். அவன் உடனே "அடி குட்டி நீயடி, என்னைத் தேடியலைஞ்சு போனியாடி என்றுகொண்டு எடுத்தானேட்டம் நல்லவேளை என்பக்கமாயல்ல. ஓடுவதாவது. தந்தக பித்தக என்று சதிர். அதுவும் நடுராத்திரியில். எட்டு மாதக் குழந்தைமாதிரி நடந்து ஒரு பிடவைக்கடைச் சுவரோடு அடியுண்டு "கிளியே கோந்தாடி போ....உட...ச்சு.... வாடி துடைச்சுடறேன்" என்றுகொண்டு விழுந்தான. இதென்ன பிரமாதம் என் நான் சுப்பையா என்றேன் என்று வருந்தினேன். மண்டை அடிபட்ட சப்தம் படாரென்று உரத்து அந்நிசப்தமான நேரத்தில் கேட்டது.

சுவரைத் தனைகைகள் நடுங்கநடுங்கத் தடவினன். அந்தச் சுவரில் ஒட்டியிருந்த பெனரிஸ் புடவை விளம்பரப் படத்தையுஞ் சுரண்டிக் கிழித்தான்.

பின்.

"கெஞ்சுகிறேனடி அடி கெஞ்சுகிறேனடி
கொஞ்சம் கொஞ்சிக்கொடடி கொஞ்சிக் கொடடி........"

என்று இழுத்துக் கொண்டு விழுந்து கிடந்த படியே முகத்தைத் திருப்பிச் சுவரை நோக்கு பார்த்தான்- பிறகு கஷ்டப்பட்டு எழுந்து மடியிலே கையை விட்டு இந்தாடி குட்டி கடைத் தெருவில என்னுலும் வாங்கேண்டி" என்று நான் பகலில் வெட்டி வைத்திருந்த பாக்குத்துண்டை எடுத்துச் சுவரில் எறிந்தான். எறிந்து விட்டு 'நில்லடி நானு நல்ல நல்ல மாம்பழம் வாங்கி வாரேண்டி, நில்லுடி ஓடடாதே" என்றுவிட்டு நான் பதுங்கி நின்ற எலக்டிரிக் தூணுக்கு அடுத்தண்டை வந்து 'ஐபா ஐபா, அதிலே ரெண்ணு பழமாப் பாத்துக் குடுங்கோ; அழுவல் கிழுவல் வேண்டாம், சொன்னவிலை பேரம் ஒண்ணும் பண்ணாமலே குடுத்துடறேன்" என்றான், ஓகோ இவனுக்குப் பயித்தியந்தான் என்று முடிவு கட்டினேன். "நீங்க தானு ஆக ஏவாரம் பண்றீங்க அடுத்த கடையிலே பாக்கறேன்" என்று போனன் அப்படியே போய்ச் சாக்கடை ஜல வாய்க்காலில் இறங்கினன். "எப்பேலேயா தண்ணியே ஊதப் பாக்கறயள். ஆ........... ஒஇய்" என்று கொண்டு வெளியே ஏறி வந்தான. நடுத்தெருவிலே கடைக்காரர் கிழித்து எறிந்திருந்த சிவந்த மட்டைத் துண்டு ஒன்றை எடுத்துக் கடித்துக்கொண்டு "ஐபா நன்றாிக்கு நன்றாிக்கு" என்றான்.

ஓர் கடைக்குள் "நானுமுறை டிங் டிங......" என்று மணியடித்தது. உடனே அவன் நிமிர்ந்து "அடியே நில்லடி ......." என்று கொண்டே தடதடத்தோடினன். ஏனே தெரியாது. இந்த வேடிக்கையெல்லாம் உண்மையில் நானு காலரை மணித்தியாலமாய் 'ஆக்ட்' செய்து காட்டப்பட்டது. — நானும் பின் தொடர்ந்தேன். ஒரு கால் மைல் வரையில் நடந்து விட்டான. ஆனல் அரை மணி நேரம் பிடித்திருக்கும். எனக்கோ தூக்கமில்லை பயமதிகம். ஒன்றும் முடியவில்லை. வாய் திறந்தால் எத்தனை கூத்து ஆடுவானே தெரியாது. தெருவோரத்தில் ஒரு மரம் நின்றது அதைப்போயுதைத்தான். தொப்பென்று பின் பக்கமாய் விழுந்தான்; எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. — பகலிலாய் இருந்தால் நீயகள் இப்போது செய்கிற மாதிரிச் செய்திருப்பேன். — பிறகு எழுந்து மறுபடியும் மூச்சு எடுத்து உதைத்தான். இவனுக்கு ஏன் இந்த மரத்தின் மேல் கோபமோ தெரியாது "ஏய்.......ச்....ச்ச் ....... எழுந்திரு எழுந்திரு வண்டி பூட்டணும்" என்றான். பிறகு மரத்தினடியிலிருந்த மண்ணைக் கையினுல் வாரண்டிவாரண்டி நடுத்தெருவிற் குவித்தான். எனக்கு அப்போது ஒன்றுமே புரியவில்லை. அவனுக்குப் பைத்தியமாயுமில்லை; பசாசு தான் பிடித்திருக்கிறதென்று நினைத்தேன்.

பின் எதையோ நினைத்துக் கொண்டு ஒரு வழியாய்ப் போனன். விடிவதற்கு நேரமாய்விட்டது. நிலவொளியும் மங்கலாயிருந்தது. எனக்குப். பயங்குறைந்தது. என் தலையையும் போர்த்திக்கொண்டு அருகே நடந்தேன். சுப்பையன் அப்பொழுது விகாரப்பட்டேயிருந்தான். அவனைத் தாண்டி முன் புறஞ் சென்றேன். அவன் கவனிக்கக் காணவில்லை. 20 கஜ வரையில் முன்னே போனபின "நீலாயி நீலாயி" என்று சொல்லிக்கொண்டு தூரத்தினன். ஓடோடிச் சென்று ஒரு மடத்துச் சுவருகில மறைந்து நின்றேன். சிறிது நேரம் நான் எட்டிப்பார்க்காமலிருந்தேன். பிறகு திரும்பிப் பார்த்தேன். ஒருவரையுங் காணவில்லை. வந்தவழியே திரும்பிப் போனேன். சுப்பையனைக் காணவில்லை. கூப்பிடவும் எண்ணவில்லை. மடத்தின் மறுபக்கத்தில் ஒரு கேணியிருந்தது. அந்தப்பக்கமாய்ப் போயிருப்பானே என்று எண்ணினேன். ஒருவருமில்லை, ஏதோ என்னைத் தூண்டிற்று. ஓடிப்போய்க் கேணியைப் பார்த்தேன்.

கழ கழ வென்று நீரிலிருந்து குமிழி கிளம்பிற்று. உற்றுப் பார்த்தேன். மங்கலான வெளிச்சம் உதவி செய்தது. அடியில் ஒரு ஆள் அசைவற்று நிமிர்ந்து கிடந்து குமுழியிடுகிறர். உடனே என் சட்டையைக் கழற்றி வைத்துவிட்டு -பசாசுப்பயமிருந்தாலும்- குதித்து ஆளைத் தூக்கிப் படிவழியே சிரமத்துடன் இழுத்து, வெளியே போட்டேன். அது யா . . ர் . . ? சுப்பையன்தான். இதற்கிடையில் மடத்திலிருந்தவர்கள் பலர் வந்துவிட்டார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம சுப்பையனை மடத்திண்ணையில் கிடத்திப் பலர் சிகிச்சை செய்தனர். கண்ணை விழித்தான். "அடே சுப்பையா என்னடா குளத்து நீரில இறங்கிக் குமிழி விடுகிருய்" என்றேன்.

அவன் "ஐபா இப்படித்தானுங்க எங்க பிழைப்பு. நீர்க்குமிழிதானே" என்றான். அவன் வாயிலிருந்து கள்ளும் சாராயமும் கலந்து மணம் வீசியது. "சனிக்கிழமை யிரவு கள்ளுக்கடை நீரிலே நீர்க் குமிழி எப்படியென்று பார்த்தாயோ?" என்று சொல்லிக்கொண்டு, சுகமே ஞாயிற்றுக்கிழமை காலையில் வீடு சேர்த்தேன்.

---

## கொள்ளுப் பிட்டியில் திருட்டு.

### திருடன் வீட்டுக்காரன் சண்டை

ஜூலை 7உ

கொள்ளுப்பிட்டி செல்லழந்து அவன்யூ வாசியான அட்வோகேட் திரு. சி. எஸ். பி. குமாருலசிங்க என்பவர் நேற்று அதிகாலையில் தமது விட்டில் திருடவந்த இரு திருடர்களுடன் சண்டையிடவேண்டியதாயிற்று.

திரு. குமாருலசிங்க தமது படுக்கையறையில் தூக்கிக்கொண்டிருந்தார். அதற்கடுத்த அறையில் யாரோ நடமாடும் சப்தத்தின் காரணமாக அதிகாலையில் ஏறக்குறைய 3 மணிக்கு அவருக்கு விழிப்பு வந்தது. அடுத்த அறையிற் சென்று பார்த்தபோழுது ஒருவன் ஒரு பெட்டியைத் திறக்க எத்தனிப்பதைக் கண்டார். அட்வோகேட் உடனே திருடனைப் பிடித்தார். ஜன்னலுக்கருகில் இருவருக்கும் சண்டை நடந்தது. அவ்வமயம் ஜன்னலுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு திருடன் ஒரு கல்லை எடுத்துத் திரு. குமாருலசிங்கா மீது எறிந்தான். கல் அவரது முகத்தில் தாக்கியதும் அவர் மற்றவனை விட்டுவிட்டார். உதவிக்கு மற்றவர்கள் வருமுன் திருடன் ஜன்னல் வழியாகத்தப்பி ஓடிவிட்டான்.

பங்களாவிலிருந்து ஒன்றும் திருடப்படவில்லை, குற்ற இலாகாப் போலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

---

# புலிவாயிலிருந்த குழந்தையை மீட்ட தாயார்

## குழந்தைகளைக்கொன்று பொலிஸாரிடம் அகப்படாமல் திரியும் கழுதைப் புலிக்கூட்டம்

லட்சுமணபுரி ஜூலை 3

கழுதைப் புலிகள் கூட்டமொன்று கிராமங்களில் அட்டகாசஞ் செய்துகொண்டு வருவதுடன், சுமார் ஒரு டஜன் குழந்தைகளைக்கொன்று பலரைக் காயமும் படுத்திவிட்டதாக மெயின்புரியிலிருந்து இங்கு கிடைத்திருக்கும் செய்தி யொன்று கூறுகிறது.

இக் கழுதைப்புலிக் கூட்டம் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிகவேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகையால் இவ்விலங்குகளைச் சுட்டு வீழ்த்துவதற் கென்றே நியமிக்கப்பட்டிருக்கும் பொலிஸ படையினரும் ஒன்றுஞ் செய்ய முடியாமலிருக்கிறது இம்மிருகக் கூட்டம் 30 மைல்விஸ்தீரணத்திற்கு வேட்டையாடி வருகிறது. இதனல் அநேக கிராமவாசிகள இரவு பகல் தூக்கமின்றி அவதிப்பட்டு வருகிறார்கள்.

**குழந்தைகளைத்தான் தாக்குகின்றன**

இக் கழுதைப் புலிக் கூட்டத்தினிடம் ஒரு முக்கிய விசேஷமிருக்கிறது அவைகள் குழந்தைகளைத்தான் தாக்குகின்றனவே யன்றி பெரியவர்களை ஒன்றும் செய்வதில்லை.

ஒரு கழுதைப் புலிக்கும் ஒரு மாதிற்குமு நடந்த போராட்டத்தைப்பற்றிய ருசிகரமான விவரங்களும் இங்கு கிடைத்திருக்கின்றன. தனது இளங் குழந்தையை அபாயாது காக்க முயன்றதில் பலத்த காயமடைந்தாள், இம்மாது தனது குழந்தையைப் பக்கத்தில் ஒரு மரத்தடியில் படுக்க வைத்துவிட்டு வயலில் வேலை செய்துகொண்டிருந்தாள். அச்சமையத்தில் ஒரு கழுதைப் புலி அங்கு வந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு நழுவ ஆரம்பித்தது. குழந்தை வீறிட்டழும் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்க்கையில் தன குழந்தையைக் கழுதைப்புலி தூக்கிக்கொண்டு போவதைக் கண்டாள், தாய் உடனே அரிவாளுடன் புலியின் பின்னல் விரட்டிச் சென்றாள். அப்புலி இம்மாதின்மீது பாய்ந்து படுகாயப்படுத்தி விட்டதெனினும் குழந்தையை மீட்டுவிட்டாள்.

இக் கழுதைப்புலிக் கூட்டத்தைச் சுட்டுக்கொல்வதற்காக ஆயுதந் தாங்கிய பொலிஸார் இரவு பகல் கண்கொட்டாமலிருந்து வருகிறார்கள். அநேக கிராமவாசிகளும் தங்கள் குழந்தைகளைக் கழுதைப்புலிகளுக்குப் பறிகொடுத்துவிடாதபடி காக்க இரவு பகல் கண்விழித்து வருகின்றனர்.

---

## அபிஸீனியா தீர்மானத்தின் முதல் பலன்

### டான்ஸிக்கில் ஜெர்மனி நடவடிக்கை எடுத்தால் ஆச்சரியமாகாது

ஜெனிவா ஜூலை 5—

நேற்று சங்க கவுன்ஸில் கூட்டத்தில் ஜெர்மன் ஜனங்களின் சார்பாகப் பேசுவதாக ஹெர் கிறிஸ்லர் கூச்சலிட்டு விட்டுச் சென்றதினல் அவர் ஜெர்மன் அரசாங்கத்தின் ஆதரவின் பேரிலேயே அவற்றை மரியாதையின்றிப் பேசினர் என்று நினைக்கப்படுகிறது. அதனல் டான்ஸிக்கில் சமீபத்தில் ஏதாவது ஓர் புரட்சி நடந்ததாக சங்கத்திற்குச் செய்தி வந்தால் அதனல் ஒருவரும் ஆச்சரியமடையமாட்டார்கள். ஹெர் கிறிஸ்லர் பேச்சைப்பற்றி இன்று காலை எதியோப்பிய விஷயமாய் தீர்மானம் செய்ததின் முதல் பலன் இது என்று ஓர் சங்கக் கவுன்ஸில் அங்கத்தவர் சொல்லுகிறார்.

---

## "பனந்தோப்புள் பலாத்காரமாகக் கற்பழித்தான்"

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

சி:- இல்லை.

த:— வேறுவழியில்லையா?

சி:- உண்டு ஆனல் நாங்கள் அவ்வழியால்தான் போகும்வழக்க முண்டு.

த:— பனைவடலிக் கூடலுக்குள் கொஞ்சத்தூரந்தான் இழுத்துச் செல்லப்பட்டாய்.

சி:- ஆம்.

த:- பாதையால் அந்தப்பனைக்கூடலின்பக்கத்தால் சென்றால்உங்களைக்கண்டிருக்கமுடியும்.

சி:- ஆம்.

த:— அவன் உன்னுடன் அதிகநேரம் செலவழிக்கவில்லை.

சி:- ஆம்.

த:— அவன் உன்னை வீழ்த்தினன்.

சி:— ஆம.

த:- ஒரு கையால் உனது வாயை மூடினனா?

சி:— ஆம்

த:- மற்றக்கையால் மார்பில்அமர்த்தினனா?

சி:- ஆம்

த:- அப்போது எப்படி ஆடையைக் களைந்தான்?

சி:- ஆடையைக் களைந்தபின்தான் வீழ்த்தினன்.

த:- நீ ஏன் உனது கைகளால் விருண்டவில்லை.

சி:- அவன் காலால் அமர்த்திப் பிடித்துக் கொண்டான்

த:- நீ களைத்தாயோ?

சி:- இதன்பின்புதான் களைத்தேன்

த:- அவ்விடம் வந்த இருவரும் உன்னிடம் விசாரித்தார்களா?

சி:- ஆம்.

த:- எதிரியின் பெயரைச் உனக்குச் சொன்னது யார்?

சி:- பழனி கந்தையாதான் சொன்னர்.

த:- பழனி கந்தையாமீது செல்வி என்னும் சிறுமியை மானபங்கஞ் செய்ததாக ஓர் வழக்கு நடக்கிறதா?

சி: எனக்குத் தெரியாது?

த:- இப் பனைக் கூடலைச் சுற்றிவர 7 வீடுகள் உண்டு

சி:- ஆம்

த:- பொன்னனையும் கந்தையனையும் விட வேறு யாரும் அவ்விடம வரவில்லை.

சி:- வரவில்லை

த: அவர்கள் வந்தபோது நீ நிர்வாணமாகத்தான் இருந்தாய்?

சி:- ஆம்

த:- அப்போதுதான் உனக்கு அது விளங்கிற்று?

சி:- ஆம்.

த:- நீ ஒவ்வொருநாளும் உடுக்கும் புடவையை மாறும் வழக்க முண்டா?

சி:- இல்லை இரண்டு அல்லது மூன்றுநாளைக்கொருதரம் மாறுவேன்

த:- உனது தாயார் உனக்கு ஆக இரண்டு துணிதான் உண்டென்கிறாள்.

சி:- ஒன்று கோட்டில் கிடக்கிறது எனனிடம் இரண்டு இருக்கிறது.

இதன் பிற்பாடு பொன்னன், கந்தையா, விதானையார் முதலியவர்களை விளங்கியபின நீதியாசர் எதிரியை ஜூரிமார் கண்டபடி குற்றவாளியல்லவெனக் கூறி விடுதலை செய்தார்,

# இலங்கையில் நெய்யப்பெற்ற சீலைகள்

## வெள்ளவத்தை மில்லில் தயாரிக்கப்பட்டவை

ஒவ்வொருவீட்டிலும் நன்கு அறியப்பட்டவை என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம்

இவை நன்றாக உடைதாங்கக்கூடியவை; பார்வைக்கு மிக அழகானவை; மிக மலிவானவை;

உங்கள் வியாபாரிகளிடம் **இச்சீலைகளையே** தரும்படி வற்புறுத்துங்கள்!

உத்தரவாதம்பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரைச் சேலைகள் வேற்று நாடுகளிலிருந்து இங்கு சேலைகளை இறக்குமதி செய்விக்கும் எவருக்கும் பொறுமையை விளைப்பனவாகும்.

உத்தரவாதம் பெற்ற அழியாத நிறமுள்ள நமது பட்டுக்கரை வேட்டிகளும் சால்வைகளும் அவற்றை உபயோகிப் போருக்குப் பெருமையை அளிப்பனவாகும்.

**சில்லறைவியாபாரக்கடை,** பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன்வீவிங் கம்பெனி லிமிடெட்டின்

முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்



# Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.

தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள சுவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் செட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துசொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும் இந்த நேத்திரானந்த தைலமே.

இச்சச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்திரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்திறுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

**தலைமை ஸ்தானம்:—**

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

**கிளை ஸ்தானம்:—**

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்றோட், கொழும்பு—இலங்கை
காவலில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332. 20-3-36 to 19-9-36)



**கண்ணே பிரதானம்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றேட் (ரசியன் குண்டி) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்திய சாலையில் இப்பொழுது நேத்திரச்சிற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளு சேர்க்கப்பட்டிருக்கதலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணிவரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
ச. இராமலிங்கப் வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)
Y 2. 7-5-36 to 30-4-37 (வி)


## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்திசெய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பந்தி | (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, | ,, | ,, | 5-50 |
| ¼ | ,, | ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


# லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும் பாரதநாட்டின் முதன்மையானதும் சிறந்ததுமான திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு சலக்கப்படவில்லை என்பதற்கு உத்தரவாதம்.

Y 44. 1-1—31-12-36)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யாசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Thursday, July 9th 1936.